# பறவைக் கூடு

## காட்சி - 1

இடம் : சைகோனில் பொன்னரசு வீடு.

காலம் : ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி

உறுப்பினர் : வட்டிக்கடை பொன்னரசு, அவர் மனைவி பட்டம்மா. அவர் மகள் புன்னை. குத்தகை கடை மேற்பார்வையாளன் முத்தப்பா. தீர்வைச் சாவடிக் கணக்கன் கரும்பாயிரம், தேயிலை விற்பனையாளர் சுப்ரஹ்மண்யன், சூசை, தேநீர்க் கணக்கன் கடைக்காரன் அப்துல்லா.

அமைப்பு : பெரியவீடு, நடுத் தாழ்வாரத்தின் நடுவில் வட்ட மேசையும் பல நாற்காலிகளும் உள்ளன. அங் கொரு சாய்வு நாற்காலி யில் ஐம்பது வயதுள்ள பொன்னரசு சாய்ந்தபடி சுவடி யொன்றில் கருத் தூன்றியிருக்கிறார். பட்டம்மாள் வீட்டின் உட் புறத்தினின்று பொன்னரசை நோக்கி வருகிறாள்.

பட்டம்மா : காலைக்கடன் முடித்தீர்கள். எட்டு மணியும் ஆகிறது. காப்பி கொண்டு வரட்டுமா அத்தான்?

பொன்னரசு : நண்பர்கள் வரட்டுமே.

பட் : அவர்கள் வந்தால் அவர்களுக்குச் சாப்பிடத் தெரியாதா என்ன? என்ன படிக்கிறீர்கள் அத்தான்?

பொன் : "கலைத் தொண்டர் கவிதைகள்"

பட் : எத்தனை முறை கலைத்தொண்டர் கவிதைகள் படிப்பது?

பொன் : நூல் கிடைத்ததும் படித்தேன். மறுபடியும் படித்தேன். மீண்டும், மீண்டும் படித்தேன். நேற்றுப் படித்தேன். படித்தேன். படித்தேன். கலைத் தொண்டர் கவிதைகள் படிக்கப் படிக்கப் படித்தேன் பட்டம்மா.

(புன்னை வருகிறாள்)

புன்னை : அந்தப் படித்தேனை மூடிவைத்தால் பிறகு உண்ணலாம். பருந்து கொண்டு போகாது. தோசை யுண்ணுங்கள் அப்பா சூடாறுமுன்.

பொன் : தோசையா! கொண்டுவா அம்மா! தொட்டுக் கொள்ள என்ன?

புன்னை : எண்ணெய், மிளகாய்ப் பொடி.

பொன் : அடடா இன்று இது தமிழ்நாடம்மா; சைகோனல்ல. மூடி விட்டேன் தமிழ்நூலை, முன்னே கொண்டுவா தமிழ்த் தோசையை.

பட் : பழநி கொண்டு வா.

(பழனி என்னும் வேலைக்காரன் மூவருக்குத் தோசை முதலியவை கொண்டு வந்து வட்டமேசையில் படைக் கின்றான்)

பொன் : (உண்ணும்போதே) எங்கே அரைத்தீர்கள் அரிசி. சூசை வீட்டிலா?

பட் : மா அரைத்தது சூசை வீட்டில்! மிளகாய்ப் பொடி நான் சொல்லி அளவின்படி சுவை குறையாமல் முடித்துக் கொடுத்தவன் அப்துல்லா.

பொன் : இன்றைக்குத் தோசை சுட இருந்ததை எனக்கு சொல்லவே யில்லையே?

புன்னை : சொல்லக்கூடாது.

பொன் : ஏனம்மா அப்படி?

புன்னை : முன்னே சொல்லிவிட்டுப் பிறகு எங்களால் தோசை சுட முடியாமல் போனால் நீங்கள் வருத்தப்படுவீர் களப்பா.

பொன் : அது மட்டும் மெய்தானம்மா

(கரும்பாயிரம் வருகிறான்)

பொன் : கரும்பாயிராமா? வாருங்கள். அடடே பழநி கரும்பாயிரம் வந்திருக்கிறார்.

(தோசை பிடிக்குமா கொண்டு வந்து படைக்கின்றான் பழநி)

பட் : தோசை பிடிக்குமா உங்களுக்கு?

கரும்பா : உயிராச்சே அம்மா. இன்னொரு நாள் இடியாப்பம் சுடுங்களம்மா.

பட் : பிழியச்சு வேண்டும், பார்ப்போம்.

(இதற்குள் முத்தப்பா, சுப்ரஹ்மண்யன், சூசை, அப்துல்லா வந்துவிடுகிறார்கள்)

புன்னை : அப்பா முத்தப்பா வந்து விட்டார்!

பொன் : வாருங்கள் முத்தப்பா. சுப்ரமணியனா! வாருங்கள் சூசை, அப்துல்லா வாருங்கள், வாருங்கள் உட்காருங்கள். பழநி, விரைவில் வா.

(அனைவரும் உட்காருகிறார்கள்.)

புன்னை : இதோ நான் போகிறேன்.

(உள்ளே ஓடுகிறாள்)

சூசை : தோசை, மிளகாய்ப் பொடியா அம்மா? ஐயையோ என்பாடு ஆபத்து

பட் : ஏன்?

சூசை : இன்றைக்கெல்லாம் வைத்தால் எனக்கு இரண்டு தோசை மிஞ்சினால் மூன்று. எப்படிப் போதும். என் ஆசை எங்கே! நீங்கள் வைக்கும் மூன்று தோசையெங்கே!

அப்துல்லா : மலை விழுங்கிக்குக் கடுகு ஒரு கண்டாங்கி என்கிறீரா?

சூசை : ஆமாம் அப்படித்தான் சொல்லுகிறேன். உன் பங்கை எனக்குக் கொடுத்துவிட நினைக்கிறீரா என்ன?

அப்து : கொஞ்சம் எட்டி உட்காரப்பா

(அப்துல்லா எட்டிப் போகிறார்)

பொன் : உனக்கு வைக்கும் தோசையைத் தூக்கிக் கொள்வார் என்றா?

அப்து : பின்னென்ன ஐயா?

சுப்ர : சூசைக்குப் பின்னும் இரண்டு வையுங்கோ

பட்ட : ஓ!

சூசை : சுப்ரமணியனுக்குக் கூடப் பின்னும் இரண்டு வையுங்களம்மா.

அப்து : அதற்குத்தானே அவர் அப்படிச் சொல்லுகிறார்.

சுப்ர : சேச்சே. அதற்காகச் சொல்லவில்லை. எனக்குத் தோசை பிடிப்பதில்லை.

**(இதற்குள் புன்னை, முத்தப்பா முதலியவர்கட்குத் தோசை வைக்கிறாள்)**

சுப்ர : இதெல்லாம் எனக்குப் பிடிக்கிறதில்லே இன்னும் இரண்டு போடுங்கோ..அதென்ன மிளகாய்ப் பொடியோ. எனக்குப் பிடிக்காது. இன்னும் கொஞ்சம் கொஞ்சம் காட்டுங்கோ.

புன்னை : மற்றவர்கட்கும் பிடிக்காது! உங்கட்கு அவ்வளவு தானுங்கோ.

**(சிரிப்புடன் அனைவரும் உண்ணுகிறார்கள்.)**

முத் : ஏன் ஐயா நீங்கள் தமிழ்நாட்டில் நாடோறும் இப்படிப்பட்ட சுவையுள்ள தோசைதானே தின்பீர்கள்.

பொன் : இன்னும் இதுபோல் என்னென்னவோ, அப்பம், இடியப்பம், இட்டலி, பிட்டு நம் நாட்டுச் சிற்றுணவு வகையே ஒரு தனி இவைகளையெல்லாம் நீர் அறியமாட்டீர். நீர் தமிழர். உம் பெற்றோர் தமிழ் நாட்டார்! நீர் தமிழ் நாட்டைத் தாய்நாடாகப் பெற்றும் தமிழ் நாட்டுணவை நுகரத்தக்க வேளை உமக்கு இல்லை. எப்போதாவது தமிழ்நாட்டுக்கு வராமலா இருப்பாய்?

முத் : நான் தாயை இழந்தேன், தந்தையையும் இழந்தேன். ஆயினும் உயிர் வாழ்கிறேன். என் தாய் நாட்டைக் காணும் விருப்பத்தால்!

புன்னை : அடுத்த ஞாயிற்றுக் கிழமை அப்பம் சுட்டுத் தேங்காய்ப் பாலில் துவைத்து உண்ண வேண்டும். தேங்காய் முதலியவை வேண்டுமே.

முத் : தேடலாம் அம்மா.

கரும்பா : இடியாப்பம் பிழியுங்கள் அம்மா

புன்னை : அதற்கடுத்த ஞாயிற்றுக்கிழமை ஆகட்டும்.

கரும்பா : முதலில் இடியாப்பம் சுட்டால் என்ன?

புன்னை : முதலில் முத்தப்பாவுக்கும் எனக்கும் தேங்காய்ப் பால் அப்பம் தேவை

பொன் : எனக்கும் அதுதான் விருப்பம். என்னை மறந்து விடாதீர்கள்.

புன்னை : இல்லை, இல்லை பயப்படாதீர்கள் அப்பா.

**(இதற்குள் தபாற்காரன் வருகிறான். அவன் செய்தித் தாள்கள், கடிதங்கள் கொண்டு வந்து முன்புறமிருந்த மேசைமேல் வைத்துப் போகிறான்)**

பொன் : தமிழ்நாட்டு அஞ்சலா!

தபாற்காரன் : ஆம்

**(போகிறான். அனைவரும் எழுந்து விடுகிறார்கள். கையலம்புகிறார்கள்).**

பொன் : (அஞ்சல்களைப் பிரித்துப் படிக்கிறார் அவர் முகம் வியப்பால் சூழ்கிறது) அடடா! எனவே இன்றுதான்! இன்றைக்குத்தான். கப்பல் துறைக்குப் போக வேண்டுமே! இந்த அஞ்சல் சென்ற கப்பலுக்கே வந்திருக்க வேண்டுமே! சுணங்கியது ஏன்? கப்பல் துறைக்குப் போக வேண்டுமே! உணவு முடிந்ததா?

பட்ட : செய்தி இன்னதென்று சொன்னால்தானே.

புன்னை : என்ன அப்பா ஊரிலிருந்தா?

முத்தப்பா : நம் நாட்டிலிருந்தா?

கரும்பா : உங்கள் மகிழ்ச்சி உங்களைத் திக்குமுக்காடச் செய்கிறதா என்ன?

சுப்ர : அமைதி! அமைதி! பொறுமையாகப் பேசுங்கள் என்ன அஞ்சல்?

பொன் : இந்த அஞ்சல் நமக்குச் சென்ற கிழமையே கிடைத்திருக்க வேண்டும். என் சிற்றப்பா தங்கவேலு பிள்ளை எழுதி யிருக்கிறார். கலைத் தொண்டர் இங்கு வருகிறாராம். இந்தக் கப்பலில்! இப்போது!

பட்டு : ஓகோ!

புன்னை : மகிழ்ச்சி, என்னால் தாங்கமுடியவில்லை!

சூசை : எம்மா எம்மா எம்மா என் தலையில் கொஞ்சம் இறக்கி வைத்துவிடுங்கள். உங்கள் அப்பாவுக்கு நீங்கள் ஒரே பெண்.

பொன் : நம்முடைய கார் ஒன்று போதாது. இன்னும் மூன்று கார் வாடகைக்குப் பேசி விடுங்கள். மாலைகள் ஏற்பாடு செய்து விடுங்கள். பட்டு, இங்கே கவிஞர் மாலை நாலு மணிக்கு வந்து சேருவார் ஏறக்குறைய ஐம்பது பேருக்குச் சிற்றுணவு ஏற்பாடு செய்துவிடு. கூடத்தில் நாற்காலி முதலியவற்றை வரிசையுறப் போட்டு வைத்து விடும்படிசெய்.

பட்ட : நான் வரவேண்டாமா அத்தான்.

புன்னை : நானுந்தானே அப்பா.

எல்லாம் முடிவு பெறவேண்டும். கிளம்பிவிட வேண்டும். நீங்கள் அனைவரும் வருகிறீர்கள் அல்லவா?

சுப்ர : நான் மட்டும் வர முடியல்லே மன்னிக்கணும். நான் ஒருவனுக்கு அடிமை.

புன்னை : மற்றவர்கள். முத்தப்பா நீங்கள்?

முத்தப்பா : கட்டாயமாக!

கரும்பா : என்னைக் கூப்பிடவில்லையே

சூசை : உன்னையும் என்னையும் கூப்பிடவே வேண்டியதில்லை.

அப்து : என்னையுந்தான். அனைவரையும் கருதி நாலுகாருக்கு திட்டம் பண்ணினார் ஐயா! இதுவுமா தெரியவில்லை? ஏன் கரும்பாயிரம்?

முத்த : நான் கார் அமாத்தப்போகிறேன்.

பொன் : விரைவாக

சூசை : நான் மாலைக்குப் போகிறேன்.

**கரும்பா** : மாலைக்கா? இப்போதே போகவேண்டும்.

**சூசை** : மாலை வாங்க என்கிறேன். காது காது என்றால் வேறு வேறு என்கிறாரே கரும்பாயிரம்.

**அப்து** : இல்லை அவர் மாலை என்பதை மாலைப்போது என்று பொருள் பண்ணிக் கொண்டார்.

**பொன்** : விரைவில் போனால் நலமாய் இருக்கும். அனைவரும் பிரிகிறார்கள்.

## காட்சி - 2

இடம் : (மேற்படி)

நேரம் : மாலை 6 மணிக்குள்

உறுப்பினர் : மேற்படியனைவரும் மற்றும் பலர்.

அமைப்பு : கவிஞர் கலைத்தொண்டர், பட்டு மெத்தை தைத்த ஓர் நாற்காலியில் வீறுடன் அமர்ந்திருக்கிறார். அண்டையில் ஒருவன் அவருக்குப் பெருவிசிறி கொண்டு வீசிக் கொண்டிருக்கிறான். ஏறக் குறைய ஐம்பது பேர் அவர் முகம் பார்த்தபடி நாற்காலிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

**கவிஞர்** : தோழர் பொன்னரசு அவர்களே, தமிழர் கழகத்தினர் களே! மற்றுமுள்ள இருபான்மைத் தமிழ்த் தோழர்களே, உங்களோடு இன்று இச் சைகோனில் உள்ள தமிழர்க ளாகிய உங்களிடம், முன்னேற்றத்திற்குரிய ஓர் நன்னிலைமையைக் காணுகிறேன். அது, எனக்கு ஈடற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழ் நாட்டில் குற்றுயிராய்க் கிடக்கும் சாதிப்பிணக்கும், சமயப் பிணக்கும் சைகோன் தமிழர்களிடம் இறந்தே போயின! ஆத்திகருக்கு என் இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிரிவின்றிச் சேர்ந்துள்ள அமைந்ததான இன்றைய விருந்தை நான் மறக்கமுடியாது. விருந்திட்டார்க்கு என் உளமார்ந்த நன்றி. என்னைப் பெருமைப்படுத்தி வரவேற்று மகிழ்வித்தமைக்கு மற்றொரு முறை நன்றி கூறுகிறேன்.

விருந்தில் மட்டுமல்லாமல் எப்போதுமே ஒருவர் வீட்டில் ஒருவர் வேறுபாடின்றியே உண்பீர்களா?

**புன்னை** : போடாத குறைதான்.

**கவிஞர்** : அவ்வளவுதானா? மிக்க மகிழ்ச்சி! கொள்வன கொடுப்பன எப்படி?

முத்த : இங்கேயே நிலையாக இருப்பவர்கள் கொள்வன கொடுப்பனவற்றிலும் வேறுபாடு பார்ப்பதில்லை. நம் தாய் நாட்டினின்று புதிதாக வந்தவர்களும், அடிக்கடி தாய் நாடு போய்வந்து கொண்டிருப்பவர்களும், தாய் நாட்டினரின் உறவினரைத் தழுவி நடக்க எண்ணும்போது தான் வேறுபாடு நினைவுக்கு வரும்.

கவிஞர் : நன்றாகச் சொன்னீர்கள். நான் இங்கு வந்தவுடன் தமிழ்நாட்டைப் பற்றி நீங்கள் மிக்க அவாவுடன் கேட்ட கேள்விகளைக் கொண்டு உங்களுக்குள்ள தமிழ்ப் பற்றையும் தமிழர் முன்னேற்றத்திலுள்ள பற்றையும் நான் அறிந்து கொண்டேன். தோழர்களே, உங்களுக் குள்ள அன்பின் அளவு தமிழ்நாட்டில் தமிழர்களிடம் காணமுடியவில்லை.

புன்னை : என்னமோ எங்கட்கு அதிக அன்பு இருப்பது எங்கட்குத் தெரியவில்லை. தங்களைப் போல் இங்குப் புதிதாக வருகிறவர்கள் இப்படித்தான் சொல்லு கிறார்கள்.

கவிஞர் : உங்களுக்குத் தெரியாதது வியப்பில்லை இளைஞன் ஒருவன், தனக்கு கால் இருக்கிறதா கையிருக்கிறதா என்று கண்ணாடி பார்க்கும் போது நினைக்கிறதில்லை. எனினும் கால், கைகள் இருந்தே வருகின்றன. மேலும் அவை வளர்ந்தும் வருகின்றன. அது கிடக்கட்டும். சைகோனிலுள்ள உங்கட்குத் தமிழ், தமிழ்நாடு, தமிழர் முன்னேற்றம் ஆகியவற்றில் அன்பு மிகுதியாய் இருப்பானேன். தமிழ் நாட்டில் உள்ளவர்கட்கு அந்த அளவு இல்லாதிருப்பானேன்!

பொன் : கவிஞரவர்களே விளக்குதல் வேண்டும்.

கவிஞர் : தாய்ப்பறவையானது குஞ்சுகள் உள்ள தன் வீட்டை வீட்டு இரைக்காக வெளியிற் செல்லும். அந்தத் தாய்ப் பறவை குஞ்சுகளுடன் கூட்டில் இருக்கையில் குஞ்சுகள் மேல் கொண்ட அன்பைவிட வெளியிற் சென்றுள்ள போது மிக்க அன்புடையதாக இருக்கிறது.

அனைவரும் : ஆம்! ஆம்! (தம்மில் ஒருவரை ஒருவர் பார்த்துத் தலை யசைத்து வியப்பை வெளிப்படுத்திக் கொள்ளு கிறார்கள்.)

பொன் : அரிய எடுத்துக்காட்டு!

கவிஞர் : தாய்நாட்டின் மேல் இங்குள்ள உங்கட்கு ஏன் மிகுதியான பற்று என்றால் தாய் நாட்டை விட்டு இத்தனை தொலைவில் வந்திருப்பதுதான்.

சூசை : அப்படியானால் தமிழ் நாட்டார் அனைவரும், அடுத்த கப்பலில் இங்கு வந்து விடலாம் ஐயா.

கவிஞர் : ஆம்! ஆனால் முடியக்கூடிய செயலா? தமிழ் நாட்டு மக்களைத் தமிழ் நாட்டில் வைத்தே உங்களைப் போல் அவர்கட்கும் அன்பை உண்டாக்குவதுதான் இப்போது தமிழ் வேண்டும். அது கட்டாயக் கல்வி ஆக்கப் பட வேண்டும். கூடவே பொதுமக்களின் உள்ளத்தை எளிதிற் கவரத்தக்க கவிதைகளும், உரைநடைகளும் குவிய வேண்டும். தமிழுக்குள்ள குறைபாடுகள் துறை தோறும் நீக்கப்படுதல் வேண்டும். தமிழ் ஏடுகள் தன்னலமற்றனவாக மிகப்பல தோன்ற வேண்டும். தமிழ் புலவர்களின் வறுமை தொலைய வேண்டும். அவர்கள் பிறரை நத்தி வாழும் நிலை ஒழிய வேண்டும். ஒரே பேச்சில் சொல்லுகிறேன். தமிழ், விடுதலை பெற வேண்டும்.

மற்றும் ஓர் உண்மை உங்கட்கு புலனாகியிருக்கும் என்று கருதுகிறேன். சாதி என்றோ சமயம் என்றோ மற்றும் பழக்க வழக்கம் என்றோ சொல்லுகின்ற வேறு பாடுகள் அனைத்தும் ஒழிவதற்கு நாட்டுப் பற்று இன்றியமையாதது.

அனைவரும் : ஆம்! ஆம்!

பொன் : கவிஞர் அவர்கள் இப்போது புதிதாக வெளியிட்ட நூல் எது?

கவிஞர் : ஆம். நான் ஒரு பெருங்குற்றம் இழைத்துவிட்டேன். அண்மையில் நான் வெளியிட்ட நூற்களின் பெயர்

முத்துப் பல்லக்கு ஒன்று, மற்றொன்று மாணிக்க கணை யாழி, இரண்டு சுவடிகளே என் கையில் உள்ளன.

**(பெட்டியொன்றைத் திறந்து இருபடிகளையும் எடுத்துப் பொன்னரசிடம் நீட்டுகிறார்)**

அவ்விரண்டு படிகளையும் பொன்னரசுவிடம் கொடுத்து விடுகிறேன். ஒன்று அவருக்கு. மற்றொன்று அவர் குறிக்கும் மற்றொருவருக்கு ஆகும்.

**பொன்** : எனக்கு, ஒன்றுமே தோன்றவில்லை. பட்டம்மா ஒரு சுவடியை உன்னிடம் ஒப்படைக்கிறேன். யாருக்கேனும் நீ கொடு!

**பட்டு** : (அதை வாங்கிக் கொண்டு) நல்ல தேர்தல்! புன்னை, நீ தான் இந்தத் தொல்லையான பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும் (என்று புன்னையிடம் கொடுக்கிறாள்)

**கவிஞர்** : நான் தாயகம் சென்றவுடன் கழகத்திற்குப் பல படிகள் அனுப்புகிறேன்.

**சூசை** : ஏன் புன்னை எனக்குத் தானே கொடுக்க நினைக்கி றீர்கள். விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிடுங்கள்.

**புன்னை** : முடிவு செய்வது எளிதாகத் தோன்ற வில்லை. ஒரு நாளாகிலும் தவணை வேண்டும்.

**அப்துல்லா** : அதுவரைக்கும் என்னிடம் இருக்கட்டுமே அம்மா. அதனால் என்ன முழுகிப் போய் விடப் போகிறது.

**புன்னை** : முடிவு செய்வது, எளிதாகத் தோன்றவில்லை.

**சூசை** : ஆமாம் இரண்டும் ஒன்றே. அப்துல்லாவுக்கு நீங்கள் கொடுக்காமல் இருக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

**அப்துல்லா** : அந்த விண்ணப்பத்திற்குப் பதில் அளிக்கும் படி நான் புன்னை அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**புன்னை** : பதில் அளிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

**கவிஞர்** : புன்னை உங்களிடம் கிடைத்த நூலின் பெயர் என்ன?

**புன்னை** : மாணிக்கக் கணையாழி!

கவிஞர் : பொன்னரசுக்கு முத்துப்பல்லக்கோ? புன்னைக்கு ஒரு கேள்வி. நீங்கள் அந்த நூலை யாருக்குக் கொடுப்பது என்பது பற்றி முடிவு செய்ய ஒரு நாள் தவணை கேட்டது பொருத்தம். உங்கள் கணையாழியை நீங்கள் யாருக்குக் கொடுக்கிறீர்கள் என்பதையறிய எனக்கு நிரம்ப ஆவல் உண்டு. ஒரு மங்கைப் பருவமுடையவள் தம் கணையாழியைக் கொடுப்பதென்றால் நன்றாகக் கருதாமல் கொடுத்து விட முடியுமா?

புன்னை : ஐயையோ! மிக்க பொறுப்புள்ள பணியை அளித்து விட்டீர்கள். எனக்கு ஒருநாள் தவணை போதாது.

கவிஞர் : உங்கட்குத் தோன்றியபோது, கொடுங்கள் என்றைக் காவது!

புன்னை : நன்றி ஐயா! (சிறிது நாணம்)

கவிஞர் : பொன்னரசு அவர்களும், கணையாழி தந்தவரையும் பெற்றவரையும் வரவேற்க முத்துப்பல்லக்கோடு காத்திருப்பாராக!

(அனைவரும் கை தட்டல்)

பட்டு : நல்லது ஐயா!

பொன் : நன்றி ஐயா. நான் விருப்பத்தோடு எதிர்பார்த்திருந்த நன்னாளை நீங்கள் அருகில் கொண்டுவந்து விட்டீர்கள்.

கவிஞர் : நாம் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வோமே.

பொன் : ஒரே ஒரு வேண்டுகோள். நாளை பலர் தமிழர் கழகத்தில் தங்களின் அரிய சொற்பொழிவை கேட்க அனைவரும் எதிர்பார்க்கிறார்கள் ஆவலோடு.

கவிஞர் : சரி! என்ன பொருள் பற்றி?

புன்னை : "பெண்கள் கடமை"

பட்டம்மா : "பெற்றோர் கடமை"

பொன் : "பெற்றோர் கடமை"

அப்துல்லா : "தமிழகம்"

கவிஞர் : அவரவர் ஒவ்வொன்று சொன்னீர் அவரவர் "தலைப்பை" ஒரு தாளில் எழுதி அவரவர் பெயரையும் அதில் குறியுங்கள்.

(அனைவரும் தனித்தனியே எழுதிய தாள்கள் அனைத்தும் கவிஞரிடம் சேர்கின்றன.)

கவிஞர் : (ஒவ்வொன்றாகப் படிக்கிறார்) பெண்கள் கடமை - புன்னை, பெற்றோர் கடமை - பட்டம்மா, பெற்றோர் கடமை பொன்னரசு, தமிழகம் - அப்துல்லா, மக்கட்கு மதமும் சாதியும் வேண்டுமா - கரும்பாயிரம், தமிழ்நாட்டு இளைஞர் கடமை - முத்தப்பா, நாட்டன்பு - சூசை - வர்ணாஸ்ரமதர்மம் காக்கப்படுதல் - ஆவஸ்கம் சுப்ரஹமண்யன். இங்கே உங்களிடையேயும் ஒருவர் இருக்கிறார் பசுப் பாலில் இட்ட நீலமணி போலும்!

(அனைவரும் சிரிக்கின்றார்கள்)

பொன் : நல்ல எடுத்துக்காட்டு.

கவிஞர் : இருக்கட்டும், நான் நாளைக்கு நீங்கள் கொடுத்துள்ள எல்லாத் தலைப்புக்களைப் பற்றியும் பேசி என் கருத்தை விளக்கிவிடுகிறேன்.

பொன் : ஓய்வு கொள்ளுங்கள்.

(அனைவரும் கவிஞரை வணங்கிப் பிரிகிறார்கள்.)

## காட்சி - 3

இடம் : சைகோனில் தமிழர் கழகத்தையடுத்துள்ள ஓர் காட்சிச் சோலை.

நேரம் : மறுநாள் காலை.

உறுப்பினர் : கரும்பாயிரம், அப்துல்லா.

அமைப்பு : பல மேடைகள் ஒருபுறம்.

**(கரும்பாயிரம் அப்துல்லாவும் பேசுகிறார்கள்)**

கரும் : பார்த்தவரைக்கும் உமக்கு எப்படித் தோன்றுகிறது?

அப்து : புன்னையுள்ளம் முத்தப்பாவை நாடுகிறதென்றே சொல்ல வேண்டும். ஆயினும் பெண்கள் உள்ளத்தை அறிவது எளிதல்ல.

கரும் : நானும், பொன்னரசு, புன்னை, பட்டமாவும் தோசை உண்ணும்போது, நீரும், முத்தப்பாவும் வந்தீர்கள். அப்போது 'புன்னையின் நிலையைப் பார்த்தீரா? முத்தப்பா வருகிறார் முத்தப்பா வருகிறார் என்றல்லவா மகிழ்ச்சிக் கூத்தாடினாள்.

அப்து : அதுமட்டுமா அவளே ஓடினாள் முத்தப்பாவுக்குத் தோசை கொண்டுவர. மெய்தான். பெண்கள் உள்ளத்தை நம்பக் கூடாது. நட்புள்ளம் முத்தப்பா மேலும், காதல் உள்ளம் உம் மேலும் செலுத்தியிருக்கவும் கூடுமல்லவா?

கரும் : இருக்கலாம். எப்படியாவது அவள் உள்ளத்தை அறிந்து கொள்ள வேண்டுமே? அதற்கு என்ன செய்யலாம் அப்துல்லா?

அப்து : யாரையாவது அவர்களிடம் அனுப்ப வேண்டும். என்ன சொல்ல வேண்டுமென்றால் கரும்பாயிரத்துக்கு என் பெண்ணைக் கொடுக்க நினைக்கிறேன். கரும்பாயிரத்தின் நடத்தை எப்படி? என்று கேட்கவேண்டும். அதற்கு அவர்கள் சொல்லும் சொற்களிலிருந்து தெரிந்துவிடும் புன்னையின் எண்ணமும் பெற்றோரின் எண்ணமும்.

கரும் : நல்ல யோசனைதான். அதற்கு யாரை அனுப்பலாம்? திறமையுடையவராகவும் புன்னையும் புன்னையின் பெற்றோரும் நம்பும் நிலையில் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

அப்து : சீனியை அனுப்பலாமா?

கரும் : வேண்டாம் வேண்டாம். சீனியை புன்னைக்கும், பொன்னரசுக்கும் தெரியும்.

அப்து : அப்படியானால், ஒரு பகல் வேஷக்காரன் இருக்கிறான். அவனை யாரும் தெரிந்திருக்க முடியாது. நன்றாகப் பேசுவான். தோற்றமும் நன்றாயிருக்கும். அவன் பெயர் தெரியாது. ஆளைத் தெரியும். ஏற்பாடு செய்கிறேன். இன்று மாலை கவிஞரின் சொற்பொழிவு! நாளைக்கு அனுப்பலாம்.

கரும் : தம் தேயிலையைக் கடைக்கு வாங்கிக் கொள்வதால் சுப்ரமணியனுக்கு மிக்க வருவாய் ஏற்படும் அல்லவா! இரண்டு தடவை கேட்டுப் பார்த்தார். நானும் மறுத்து விட்டேன். பிறகு அது பற்றி ஒன்றும் சொல்வதில்லை.

அப்து : சுப்ரமணியனின் தேயிலை நாம் நம் கடையில் பயன் படுத்துவதில் இருக்கும் தொல்லை என்னவென்றால் நாம் நெடுநாட்களாக விருதுநகர்த் தேயிலையைக் கொண்டு தேநீர் செய்து வருகிறோம். திடீரென்று சுப்ரமணியன் சொல்லும் பாம்பு குறியிட்ட தேயிலையைக் கொண்டு தேநீர் காய்ச்ச தலைப்பட்டால் கடை திடீரென்று விழுந்து விட்டால் வருமா? அன்றியும் விருதுநகர்த் தேயிலைக் குடையவர் உம் உறவினர்.

கரும் : பாம்பை எதற்காக அப்துல்லா ஒப்புக்கொள்வது? வெட்கக்கேடு. பிறகு நாளைக்கு அந்த ஆளை ஏற்பாடு செய்கிறீரா? நான் புன்னையை மணக்க வேண்டும், அவள் அழகுக்காக, அவள் சொத்துக்காக, அவள் படிப்புக்காக.

**அப்துல்லா** : எல்லாப் பொருத்தமும் உள்ள பெண். கூடிய வரைக்கும் பார்ப்போம். நான் கடைக்குப் போக வேண்டும்.

**கரும்** : நல்லது போய்வாரும். நினைவிருக்கட்டும்.

**அப்துல்லா** : மறந்துவிடுவேனா என்ன!

(அப்துல்லா போகிறான்)

## காட்சி - 4

இடம் : தமிழர் கழகம்

நேரம் : மறுநாட்காலை 9 மணி

உறுப்பினர் : புன்னை, பொன்னரசு, சொக்கு,

அமைப்பு : தமிழர் கழகத்தில் புன்னையும், பொன்னரசும் தனித் தனி நாற்காலிகளில் குந்திச் சுவடி படித்திருக்கிறார்கள். மற்றும் பல சுவடிகள் மேசைமேற் கிடக்கின்றன. சொக்கு உள்ளே செல்கிறான். சென்று தானும் ஒரு சுவடியை எடுத்துப் பார்ப்பவன் போல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறான்.

சொக்கு : (பொன்னரசை நோக்கி) நீங்கள் கழகத்தின் தலைவரல்லவா ஐயா.

பொன் : ஆம். நீங்கள் யார்?

சொக்கு : சைகோனுக்கு வந்து சில மாதங்கள் ஆகின்றன. உங்கள் வீட்டுக்கு கரும்பாயிரம் என்பவர் அடிக்கடி வருவாரே?

பொன் : வருவதுண்டு. ஏன் கேட்கிறீர்கள்?

சொக்கு : தங்களுக்கு ஓய்வு இருக்கும்போது தங்களை வந்து பார்த்துச் சில தகவல்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஒன்றுமில்லை. நம் பெண்ணுக்கு மணம் ஆக வேண்டியதிருக்கிறது. கரும்பாயிரத்துக்குக் கொடுத்து விடலாம் என்று சிலர் கூறினார்கள். தங்களைக் கேட்டால் கரும்பாயிரத்தைப் பற்றிய உண்மை நடத்தைகள் தெரியும் என்றும் கேள்விப்பட்டேன். நேற்றுத்தான் உங்களை எனக்குத் தெரியும். கவிஞர் சொற்பொழிவுக்கு வந்திருந்தேன். தாங்கள் சொற்பொழிவின் முடிவில் நன்றி கூறிப் பணமுடிப்பும் அளித்தீர்கள். தமிழர் கழகத்தின் தலைவர் என்றும் அப்போது தெரிந்து கொண்டேன்.

புன்னை : கரும்பாயிரம் மிக நல்லவர். படித்தவர். வருமானமுள்ளவர். ஒழுக்கக் குறைவான எவ்வகை நடவடிக்கையும் அவரிடம்

இல்லையே. நன்றாய் மணத்தை முடித்துவிடலாமே. ஆனால் பெண்ணை அவர் பார்த்தாரா? பெண் அவரைப் பார்த்ததுண்டா? இருவரும் ஒத்துக் கொள்ளுகிறாரா? என்பதுதான் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள்.

சொக்கு : பெண்ணைப் பார்த்தால் பிடிக்காமல் போகாது. அதுமட்டும் உறுதி. அதுவுமின்றிக் கரும்பாயிரத்தைப் பற்றி அனைவரும் நல்ல படியாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் நம் கழகத் தலைவர் மகளைக் கரும்பாயிரத்துக்குக் கொடுக்கப் போவதாக.

பொன் : என்ன என்ன

புன்னை : சொல்லட்டுமே பிறகு?

சொக்கு : கேள்விப்பட்டேன். அது மெய்யோ பொய்யோ?

புன்னை : நான் அவர் மகள். என் தகப்பனார் தாம் இவர். நான் கரும்பாயிரத்தை மணந்துகொள்ள நினைத்ததில்லை. நினைக்கவும் மாட்டேன். என் தந்தைக்கும் அந்தக் கருத்தில்லை.

பொன் : எனக்கு அந்த எண்ணமே இல்லை ஐயா. நீங்கள் நாளை வளர்த்தாமல் திருமணத்தை விரைவில் முடித்துவிடலாம். மிகவும் நல்ல பிள்ளை.

சொக்கு : நல்லது. ஆனால் உங்கள் பெண்ணைக் கரும்பாயிரத்துக்குக் கொடுக்க மறுப்பதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே?

பொன் : காரணம் இல்லாமலா? காரணம், திருமணம் இப்போது செய்து கொள்வதாக என் பெண் எண்ணவில்லை.

சொக்கு : மெய்தானா அம்மா!

புன்னை : மெய்! விளக்கமாயிற்றா இப்போது!

சொக்கு : வேறு எப்போது மணம் செய்து கொள்வதாக எண்ணம்? ஏன் கேட்கிறேன் என்றால், உங்களுக்காகக் கரும்பாயிரமும் காத்திருக்கவும் கூடுமே?

புன்னை : காத்திருப்பதால் பயனில்லை. நான் அவரை மணக்கப் போவதில்லை.

சொக்கு : வேறு யாரையோ உங்கள் உள்ளம் குறிப்பிட்டிருக்கலாம்.

புன்னை : நீங்கள் போய் வருகிறீரா?

சொக்கு : படிப்பகம் அல்லவா இது?

புன்னை : படிக்கப் போகிறீர்களா?

சொக்கு : போகச் சொன்னால் போய்விடுகிறேன்.

புன்னை : படித்துக் கொண்டிருங்கள்.

(புன்னையும், பொன்னரசும் வெளியிற் போய் விடுகிறார் கள்.)

## காட்சி - 5

இடம் : சைகோனில் ஒரு தெரு.

நேரம் : காலை 11 மணி

உறுப்பினர் : கரும்பாயிரம், சொக்கு, சுப்ரமணியன்.

அமைப்பு : கரும்பாயிரம், எதிர்பார்த்து நிற்கிறான். சொக்கு எதிரில் வருகிறான்.

கரும் : என்ன சொக்கு? காயா? பழமா?

சொக்கு : வறட்டுக்காய். எப்போதும் பழுக்காது.

கரும் : அப்படியா? என்ன நடந்தது?

சொக்கு : நீர் சொல்லியபடியே ஒழுங்காகத் துவக்கினேன். பேச்சு நேராகத் தொடர்ந்தது. அந்தப் பெண்ணே சொல்லிவிட்டாள் நான் கரும்பாயிரத்தை மணந்துகொள்ள நினைக்கவில்லை. இனியும் நினைக்க மாட்டேன். நீங்கள் உங்கள் மகளை விரைவில் கட்டி வைக்கலாம். என்று, நான் கேட்டேன் நீங்கள் கட்டிக்கொள்ள மறுப்பதால் கரும்பாயிரத்திடம் ஏதோ குற்றம் இருக்கிறது என்று. அவள் சொன்னாள் அப்படி ஒன்று மில்லை. நான் மணம் புரிந்து கொள்ள நாள் பிடிக்குமென்று. அதற்கும் நான் கேட்டேன். நீங்கள் கொஞ்சநாட்கள் பொறுத் திருப்பதால் கரும்பாயிரமும் அதுவரைக்கும் காத்திருக்க நினைப்பாரோ என்னமோ என்று. அவளுக்கு எரிச்சல் வந்து விட்டது. அவர் காத்திருந்து பயனில்லை என்று கூறி விட்டாள். அவள் தகப்பனாரும் அவள் பேச்சை முழுதும் ஆதரித்துப் பேசினார். அவளை நீர் கருதுவதிற் பயனே இல்லை! அவ்வளவுதான். நான் வருகிறேன்.

கரும் : நல்லது (கரும்பாயிரம் பெருமூச்செறிந்து அப்துல்லாவின் கடை நோக்கிச் செல்லுகிறான். எதிரில் சுப்ரமணியம் வருகிறான்).

சுப்ர : என்ன கரும்பாயிரம்? கவிஞர் சொற்பொழிவைக் கேட்டீரோ? கிஞ்சித்தேனும் ப்ரயோசனம் இல்லையாமே?

கரும் : ஆமாமாம். வர்ணாஸ்ரமம் என்பதை வைத்துக் கொண்டு ஏமாற்றி வயிறு பிழைக்கும் பேர்வழிகளைக் கவிஞர் இழிவு படுத்திப் பேசினாராம். ஒரு ப்ரயோஜனமும் இல்லையென்றுதான் கேள்வி.

சுப்ர : அதற்காகச் சொல்லவில்லை நான். பொதுவாகவே பேச்சு ஸ்வாரஸ்யப் படவில்லையாம்.

கரும் : எப்படிச் சுவாரஸ்யப்படும்? சாதிகள் இல்லையென்று அவர் சொன்னதாகக் கேள்வி. சாதியிருந்தால்தானே உயர் சாதி என்று ஊர்த்தாரியை உருவாக்கலாம்.

சுப்ர : உம் நிலைமையை அறியாமல் நீர் வர்ணாஸ்ரமிகளை வெறுத்துக் கூறுகிறீர். சாதியும் சமயமும் வேண்டாம் என்பது பற்றிப் பேசும்படி கவிஞரைக் கேட்டுக் கொண்டீர். உம் நிலைமை நீர் அறிந்திருந்தால் அப்படிக் கேட்டிருக்க மாட்டீர். இருக்கட்டும் புன்னையின் காதல் யாரிடம்?

கரும் : அதுவா? என்னை மணக்க அவள் விரும்பவில்லை.

சுப்ர : வேறு யாரை மணக்க நினைக்கிறாள்? தெரிகிறதா?

கரும் : முத்தப்பாவைக் காதலிக்கிறதாகத்தான் சொல்ல வேண்டும்.

சுப்ர : இந்த ஸுப்ரஹ்மண்யன் உதவி உமக்கு இருக்கும் பஷத்தில் ஈஸ்வரன் தடுத்தாலும் அவள் உம்மையே விவாஹம் செய்யும்படி நான் செய்வேன். ஞாபகத்தில் இருக்கட்டும் உமக்கு.

கரும் : மெய்யாகவா?

கரும் : நம்ப முடியவில்லையே!

சுப்ர : தயவு செய்து நம்பும்.

கரும் : ஏன் அந்த உதவியை எனக்குச் செய்யக்கூடாது? அன்று நீ போய்விட்ட பிறகு கவிஞரும், மற்றவரும் அந்த முத்தப்பாவும் நம்மை எவ்வளவோ தாழ்மைப் படுத்தி பேசினார்கள். நானல்லவா அவர்களின் வாயை அடக்கினேன். அந்த எண்ணம் நமக்கு இருக்க வேண்டாமா? அவள் என்னை மணக்கும் வழியை எனக்கு ஏன் சொல்லக்கூடாது. முத்தப் பாவை அவள் வெறுக்கும்படி நீர் செய்வதால் நம் பகைவனைப் பழிக்குப் பழி வாங்கியதாக முடியுமே?

சுப்ர : எதுபற்றியும் எனக்குக் கவலையில்லை. என் பாம்பு குறித் தேயிலையை அப்துல்லா வாங்கும்படி நீர் செய்ய வேண்டும். மறுநாள் உமக்கும் புன்னைக்கும் திருமணம். முத்தப்பாவை அவள் வேப்பங்காயாக எண்ணுவாள் உறுதியாக.

கரும் : திரும்பத் திரும்பத் தேயிலைச் செய்தியையே கூறுகிறீரே. விருதுநகர் தேயிலை என் உறவினருடையது. அதை நானே வாங்க மறுக்கலாமா? விருதுநகர்த் தேயிலையால் அப்துல்லா கடை நன்றாக நடைபெறுகிறது. அதை மாற்றிப் பாம்பைப் கொண்டு வந்தால், கடை வீழ்ந்து விட்டால் என்ன செய்வது? உமக்கே தெரியும், அப்துல்லா கடையில் நானும் ஓர் கூட்டாளி. வேறு எதையாவது சொல்லும் ஒப்புக்கிறேன். பாம்புக் குறியுள்ள தேயிலைக்குரியவர் நீரல்ல. உமக்கு விற்பனை மேல் விழுக்காடு தான் வரும். அந்த வருமானத்தின் அளவு நான் ஒரு தொகை கொடுத்து விடுகிறேன்.

சுப்ர : கொஞ்ச நாள் போகட்டுமே. என்னிடந்தான் வந்தாக வேண்டும். நான் சொல்லுவதுபோல் கேட்டாக வேண்டும். என் தேயிலையை ஒப்பாதவரைக்கும் உமக்கு என்னால் ஒரு உதவியும் செய்யவே முடியாது. அது போகட்டும் சாதி ஏன் சமயம் ஏன் என்கிறீரே என்ன யோசனை உம் யோசனை.

கரும் : நீர் அந்தப் பேச்சை எடுக்க வேண்டாம். சாதி வேண்டுமோ எதற்கு, சூத்திரன் என்றால் வேசி மகன், அடிமை, போரில் புறங்காட்டியவன் என்றெல்லாம் பொருள். என்னைச் சூத்திரன் என்று எவனாவது சொல்ல நினைப்பானாயின் அவன் தன் சாவுக்குப் பாடை கட்டி வைத்துவிட்டு அதன் பிறகு என்னிடம் சொல்ல வேண்டும். மக்கள் நிகர். மக்களைப் பிரிப்பது சாதியினால் அது ஒழிந்து போகட்டும். மக்களைப் பிரிப்பது மதமானால் அது மாய்ந்து மறையட்டும். மக்களைப் பிரிப்பது கடவுளானால் அது அழிந்து போகட்டும். பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற இரட்டைகள் ஒழிய வேண்டும். பொருளாதார ஒற்றுமை நிலவவேண்டும். அது உலகின் தேவை. இலட்சியம் இல்லையேல் போர், பசி, பிணி.

சுப்ர : நீரே இதைத் தலைகீழாக மாற்றிப் பேச நேரும் உமக்கே தெரியப் போகிறது. சாதியில்லை என்பதில் உள்ள தீமை. நான் வருகிறேன்.

கரும் : எங்கே போகிறீர்.

சுப்ர : தேநீர் குடித்துவிட்டு விரைவாக நான் போக வேண்டும்.

கரும் : வருணாஸ்ரம தர்மம் இருக்க வேண்டும்! அப்துல்லா கடையில் தேநீரும் குடிக்க வேண்டும். போய் வாரும்.

## காட்சி - 6

இடம் : சைகோனில் ஒரு தெரு. முனையில் ஒரு குதிரை கட்டும் விடுதி. அவ்விடுதியில் ஒருபுறம் ஒரு சிறுகுடிசை.

காலம் : இரவு மணி 10

உறுப்பினர் : பழநி, கரும்பாயிரம்.

அமைப்பு : குதிரை கட்டும் விடுதியின் எதிரில் கரும்பாயிரம் நிற்கிறான்.

கரும் : பழநி! பழநி!

பழநி : ஆர் அங்கே?

கரும் : நான் தானப்பா

பழநி : நீ தானப்பாவா? முத்தப்பா உனக்கு என்ன உறவு?

கரும் : இல்லை பழநி! நான் தான் என்றேன். கரும்பாயிரம்.

பழநி : (வெளிவந்து) வாங்க நீங்களா? ஏது இந்நேரத்திலே? இவ்வளவு தொலைவில்?

கரும் : நாளைக்கு நம் வீட்டில் ஒரு விருந்து. பெரிதாக அல்ல. இங்கே. சமையல் ஆள் ஒருவன் தேவை. உன் வழியில் தெரிந்தவன் இருந்தால் ஏற்பாடு பண்ணிக் கொடுப்பாயே என்று வந்தேன். எனக்கு நேரமில்லை. பொன்னரசு வீட்டுக்குவர, முத்தப்பா வந்தாரா?

இந்த ஞாயிற்றுக்கிழமை சிற்றுண்டி என்ன?

பழநி : நீங்க கேட்டது இடியாப்பம். முத்தப்பா கேட்டது வெள்ளப்பம். முத்தப்பா கேட்டதுதான்.

கரும் : முத்தப்பா மேலேதான் அவர்கட்குப் பற்று அதிகம், இல்லையா?

பழநி : அவர் நல்லவர்.

கரும் : மற்றவர்கள் கெட்டவர்களா?

பழநி : நல்லவர் அவர். என்றால் மற்றவர்கள் கெட்டவர்களாகத் தான் இருக்கணுமா? அப்படியில்லை. மேலும் முத்தப்பா தனி ஆள். ஆதரவில்லாதவர். எவரும் அப்படிப் பட்டவர்கள் மேலே இரக்கம் கொள்ளுவாங்க.

கரும் : நேற்று வந்தாரா முத்தப்பா அங்கு?

பழநி : வந்தார் போலத்தான் இருக்குது.

கரும் : நாளைக்கு வருவாரா?

பழநி : வருவார் போலத்தான் இருக்குது.

கரும் : நீ இங்குக் குடியிருப்பதற்கு என்ன வாடகை?

பழநி : தொல்லையாய் இருக்குதுங்க. இதற்கு இரண்டு வெள்ளி.

கரும் : அப்படியா. இந்தா இதை வைத்துக்கொள். ஒரு ஆள் தேவை என்றேனே. (ஒரு வெள்ளியைக் கொடுக்க பழநி பெற்றுக் கொள்ளுகிறான்.)

பழநி : மகிழ்ச்சிங்க. நாளைக்கு ஆள் தேவை என்று இப்ப சொன்னா என்ன செய்வதுங்க?

கரும் : நானும் சொல்லியிருக்கிறேன். அப்துல்லாவிடம். அது கிடக்கட்டும் புன்னைக்குத் திருமணம் எப்போது.

பழநி : அதைப்பற்றி பேச்சைக் காணோமே.

கரும் : அவள் உள்ளம் யாரிடத்திலாவது சென்றுதான் இருக்கும். ஏனென்றால், அவள் படித்தவள். உணர்ச்சியுள்ளவள். அதற்காகச் சொல்லுகிறேன். ஏன்? நீ என்ன நினைக்கிறாய்?

பழநி : மெய்தாங்க. புன்னையின் நெஞ்சம் முத்தப்பா மேல் சென்றிருக்கும் என்று தோன்றுகிறது.

கரும் : இருக்கலாம். எதைக் கொண்டு அப்படிச் சொல்லு கிறாய்?

பழநி : முத்தப்பா மகிழ்வதற்குப் புன்னை மகிழ்ச்சியடை கிறாங்க. அவர் வருந்தினால் இவர் வருத்தப்படுவ துண்டுங்க. அவர் நன்மையில் புன்னைக்கு அக்கரை மிகுதி.

கரும் : மற்றப்படி, தனித்துப் பேசுவது, தம் காதற் கருத்தைத் தெரிவித்துக் கொள்வது, செய்தி எழுதி அனுப்புவது, ஏதாகிலும் உண்டோ?

**பழநி** : இருக்காதுங்க. நான் அப்படி ஒன்றும் பார்த்த தேயில்லை. சும்மா சொல்லலாமா?

**கரும்** : அது சரி, பழநி, உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். நான் உன்னை வேறாக நினைக்கவில்லை. இன்று முதல் அப்படி வைத்துக்கொள். உனக்கு வந்தது, எனக்கு வந்தது. எனக்கு வந்தது, உனக்கு வந்தது. என்ன வென்றால், புன்னையை நான் மணந்து கொள்ள எண்ணுகிறேன். அவள் முத்தப்பாவை வெறுக்கும்படி உன்னால் ஆன உதவியை நீ செய்ய வேண்டும்.

**பழநி** : என்ன செய்ய வேண்டும்?

**கரும்** : எனக்குத் தெரியாது. அது உனக்குத்தான் தெரியும்.

**பழநி** : முத்தப்பாவைப் பற்றி பேச்சு வந்தால், அவர் கிடக்கிறார். அவர் ஒரு நாடோடி. அப்படி, இப்படி என்று சொல்லுகிறேன்.

**கரும்** : ஆமாம், ஆமாம் அப்படித்தான். என்னைப் பற்றிப் பேச்சு வரும்போது அவர் அப்படிப்பட்டவர். இப்படிப் பட்டவர் அவரிடம் பெரிய பணக்காரர்கள் எல்லாம் வருகிறார்கள் என்றெல்லாம் சொல்ல வேண்டும். அப்படித்தானே?

**பழநி** : ஆமாம் அவ்வளவுதான்.

**கரும்** : இன்னொரு வகையாகச் செய்யலாம். முத்தப்பா வேறு ஒரு பெண்ணை வைப்பாக வைத்திருக்கிறார் என்று சொன்னால், புன்னைக்கு உடனே அவன் மேல் வெறுப்பு ஏற்பட்டுவிடும். எப்படி?

**பழநி** : அப்படித்தான் சொல்லுகிறேன் என்று வைத்துக் கொள் ளுங்கள். அதை அவர்கள் முத்தப்பாவிடம் சொல்லி விட்டால் உண்மை விளக்கமாகிவிடும். விளக்கமாகி விட்டால் என்பாடு வெறுஞ் சோற்று அரோகரா!

**கரும்:** அப்படி உன் வாயிற் சொல்ல வேண்டாம். ஒரு பெண் முத்தாப்பாவுக்குக் காதல் கடிதம் எழுதியதாக ஒன்றை நானே எழுதித் தருகிறேன். உன்னிடம். அதை வைத்துக் கொண்டிரு, முத்தப்பா வந்து போனதும் அங்கே அந்தக் கடிதத்தைப் போட்டுவிடு புன்னை பார்க்கும் படி. நம் எண்ணத்தின்படி அவள் உள்ளம் அவனை வெறுத்துவிடும்.

பழநி : நல்ல ஏற்பாடுகள்! தேவலாங்க! மெய்தாங்க.

கரும் : இப்படிச் செய்தால் உன் மேல் குற்றம் வராதல்லவா? அப்படி வந்தால் எனக்குத் தொல்லைதானே. அதுபற்றி அஞ்ச வேண்டாம். நான் முதலிலேயே அதாவது நாளைக்கே வேண்டாம். இப்போதே இருபது வெள்ளி கொடுத்து விடுகிறேன். அப்படி நீ செய்த பிறகு ஒரு பத்து வெள்ளி கொடுக்கிறேன். எப்படி?

பழநி : சரி, அதுக்கென்னாங்க. இப்போ கொடுங்களேன். பத்து வெள்ளி கொடுக்கிறீங்களா?

கரும் : இந்தா (கொடுக்கிறான்) நான் உன்னை முழுதும் நம்புகிறேன்.

பழநி : நல்லா நம்புங்க

கரும் : காலையில் நீ பொன்னரசு வீட்டுக்குப் போகுமுன் வந்துவிடு கிறேன். ஏனென்றால் எனக்கு நாளைக்கு அலுவலகத்துக்குப் போக வேண்டும். விடுமுறை தீர்ந்து விட்டது.

பழநி : அப்படியானால் நீங்க காலை ஆறு மணிக்கெல்லாம் வந்துவிட வேண்டும்.

கரும் : வந்து விடுகிறேன். வரட்டுமா?

பழநி : நல்லதுங்க. (போகிறான்)

## காட்சி - 7

இடம் : பொன்னரசு வீடு.

நேரம் : மறுநாள் மாலை 5.00 மணி.

உறுப்பினர் : பழநி, பொன்னரசு, பட்டம்மா, புன்னை.

அமைப்பு : பொன்னரசு சாய்வுநாற்காலியில் உட்கார்ந்திருக் கிறார்.

புன்னை : அப்பா காப்பி, சிற்றுண்டி கொண்டுவரட்டுமா?

பொன்னரசு : அம்மா எங்கே?

புன்னை : ஏனப்பா? உள்ளே வேலையாய் இருக்கிறார்கள்.

பொன் : வந்து என் பக்கத்தில் உட்காரச் சொல்.

புன்னை : அப்படியா? இதோ! (தாயை நோக்கி உள்ளே ஓடுகிறாள்)

பட்டம்மா : (பரபரப்புடன் ஓடிவந்து) ஏன் அத்தான்?

**(அண்டையில் நாற்காலியில் உட்காருகிறாள்.)**

பொன் : கவிஞர் புன்னைக்கு என்ன சொன்னார்? உனக்கு எவர்மேல் விருப்பம்? அவருக்கு இந்த மாணிக்கக் கணையாழியை (நூலை)க் கொடு என்றார். கவிஞர் நினைப்பு என்ன வென்றால், புன்னைக்குத் திருமணத்திற்குரிய பருவம் வந்துவிட்டது. புன்னை விரைவில் ஒரு கணவனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது தான். அப்படி யிருக்கப் புன்னை இன்னும் நாளைக் கடத்தி வருவது எனக்கு வருத்தத்தை உண்டாக்கு கிறது. புன்னையைக் கூப்பிடு. புன்னையின் கருத்தைக் கேள். திருமணத்தை முடித்து என் கண்ணால் பார்த்துவிட வேண்டும். இப்போதே கேள். அதைக் கேட்பதுதான் இந்தக் காது பெறும் பேறு.

பட்டம்மா : எனக்கும் அப்படித்தான் அத்தான். புன்னை! இங்கு வா. இங்கு வந்து அப்பா எதிரில் உட்கார்! விரைவில்!

**(புன்னை எதிரில் உட்காருகிறாள்)**

உனக்குத் திருமணத்தை முடித்துவிட வேண்டுமே என்கிறார் அப்பா. எதற்காக நாளை வீணாக்குவது? வய தாகிறது. உன் கண்ணுக்கும் வாழ்க்கைக்கும் படிப்படியாக யாரையாவது நீ தேர்ந்தெடுக்திருக்கிறாயா சொல்லு.

பொன் : திருமணம் விரைவில் முடிக்க வேண்டும் என்பதற் காகவே கவிஞர் நிகழ்ச்சியை உண்டாக்கினார். மாணிக்கக் கணை யாழியை உனக்குப் பிடித்த பேர்வழிக்குக் கொடு என்று பச்சையாகச் சொன்னார். கவிஞர் தமிழ்நாட்டுக்குப் போகும் முன் இங்கே வருவாரே, கேட்பாரே, சும்மா இருந்தால்.

பட்டு : அதுதானே.

புன்னை : என் உள்ளத்தில் தட்டுப்படுகிற ஒன்றை நான் இன்னும் சிறிது ஆராய்ச்சி செய்யவேண்டும். அதன்மேல் வெளியிடுகிறேன். வெளியிட்ட பின் நீங்கள் இருவரும் மறுக்கக்கூடாது என் விருப்பத்தை.

பட்டு : ஏன் மறுக்கிறோம்.

பொன் : மறுக்கமாட்டோம் உறுதி. (முத்தப்பா வருகிறான்)

பட்டு : வரவேண்டும் முத்தப்பா.

முத்தப்பா : வருகிறேன். அம்மா ஐயா அனைவருக்கும் வணக்கம் (உட்கார்தல்)

புன்னை : சிற்றுண்டி கொண்டு வருகிறேன். (போகிறாள்)

பட்டு : ஏன் முத்தப்பா நம் புன்னை தம் மாணிக்க கணையாழியை யாருக்கும் கொடுக்கவில்லையே

முத்தப்பா : அதைப்பற்றி நாம் பேசவும் உரிமை இல்லை. அவர்களைக் கேட்பது கூடச் சரியில்லை. அவர்களின் உரிமை அது. அதில் அவர்களுக்குள்ள உரிமை தங்கத்தினும் விலை மதிப்புள்ளது அனிச்சம் பூப்போலும் மிக மெல்லியது.

பொன் : உண்மைதான்.

**(தேநீர் சிற்றுண்டி புன்னையும் பழநியும் கொண்டு வந்து வைக்கிறார்கள். புன்னையும் உணவுண்ண உட்கார்ந்து விடுகிறாள். முத்தப்பாவின் அண்டையில் உள்ள நாற்காலியில்**

**பழநி பலமுறையாக உணவு கொண்டு வந்து கொண்டு வந்து வைக்கிறான். பேச்சின்றி உணவுண்ணுகிறார்கள். கை கழுவிக் கொள்ளுகிறார்கள். மீண்டும் அவரவர் உட்காருகிறார்கள்.)**

முத்தப்பா : கவிஞர் சொற்பொழிவு பற்றி உங்கட்கு என்ன தோன்று கிறது?

பொன் : அவ்வளவு தெளிவாக விளக்குவது அருமை. சாதி என்பதும், சமயம் என்பதும், மக்களில் உயர்வு தாழ்வு என்பதும் ஒழிந்து போகும். மக்களிடம் நாட்டன்பு பெருகு மானால் என்கிறார். தமிழர் முன்னேறவேண்டும். தமிழ் நாடு விடுதலை பெறவேண்டும் என்று மக்கள் உள்ளத் தில் உண்டாகும் ஓர் உணர்ச்சியின் முன் எந்த வேறுபாடு தலைநீட்டமுடியும் என்று கவிஞர் கேட்டார். எவ்வளவு தெளிவு பாருங்கள். சைகோனில் உள்ள தமிழர்களிடம் சாதிப் பிரிவு சமயப் பிரிவு மூடவழக்கம் ஒழிந்து போனதற்குக் காரணம் அவர்களின் உள்ளத்தில் சுடர் விட்டெரியும் நாட்டன்புதான் என்று நம்மை உதாரணம் காட்டினார். மிக நன்று. மிக நன்று.

முத்தப்பா : அவ்வகை நாட்டன்பைத் தமிழ்நாட்டின் தமிழர்கட்கு ஊட்டுவன புதிய இலக்கியங்களே என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார். மிக அழகாக, எளிதாக.

புன்னை : தமிழ்க் கல்வி தமிழர்களிடம் பரவத் தமிழர்கள் பெரும் பாடுபட வேண்டும். செல்வர்கள் உதவவேண்டும். தமிழ் புலவர் களின் வறுமை ஒழிய வேண்டும். அவர்கள் இப்போதிருப்பது போல் அடிமையுள்ளம் உடையவர் களாய் இருத்தல்கூடாது.

முத்தப்பா : என்ன தெளிவு பார்த்தீர்களா? மணி என்ன? ஏழு. ஐயா எனக்கு விடை கொடுங்கள். எழுத்து வேலை இருக்கிறது.

பொன் : அப்படியா சரி.

முத்தப்பா : அனைவர்க்கும் வணக்கம்! (போய்விடுகிறான்)

பட்டம்மா : அத்தான் என்ன கறி வைக்கலாம்.

பொன் : எனக்கு ரொட்டி, பழம், பால் போதும்.

பட்டம்மாள் : உனக்கம்மா?

புன்னை : அப்பா சொன்னவற்றுடன் கொஞ்சம் பச்சைப் பட்டாணி பொரியல், இளகலாக! உங்களுக்கு அம்மா?

பட்டு : எனக்குச் சோறு, மிளகுநீர், நீ சொன்ன பொரியல் போதும். சரி கேட்டுக் கொண்டாயா பழநி?

பழநி : நல்லதுங்க.

பொன் : முத்தப்பா நல்ல உணர்ச்சி உள்ள பிள்ளை.

பட்டம்மா : உழைப்பாளர், கடமை தவறாதவர்.

பொன் : ஒழுக்கம்?

பட்டு : அணுவளவும் தவறாதவர். நான் போகட்டுமா சமையல் அறைக்கு?

பழநி : (வட்ட மேசையிலுள்ள வட்டாக்களை எடுக்க வந்த பழநி மேசையின் கீழே கிடந்ததாக ஒரு கடிதத்தை மேசை மேல் வைத்து) இங்கே கிடக்கிறது?

பட்டம் : (அதை எடுத்துப் படிக்கிறாள்)

> அன்புள்ள அத்தான் முத்தப்பா அவர்கட்கு, அரசம்மா எழுதுவது. என் சேர்க்கை தங்கட்கு ஏற்பட்டதிலிருந்து உங்கள் உடல் நலம் கெட்டு வருவதாகச் சொன்னீர் களாம். இதைத் தாங்கள் என் வேலைக் காரியிடந்தானா சொல்ல வேண்டும். இது கண்டதும் புறப்பட்டு வந்து சேரவும், இப்படிக்கு அரசம்மா.

பொன் : ஒழுக்கம் தவறாதவர்! என்ன வியப்பு! எவரை நம்புவது இந்த சூழ்ச்சி நிரம்பிய வையகத்தில்.

பட்டு : இந்த அரசம்மாவிடந்தான் இப்போது முத்தப்பா போகிறார் போலிருக்கிறது. சுவையுள்ள பேச்சுக்களை அவர் திடீரென்று நிறுத்தியதும் அரசம்மாவிடம் செல்வதற்காகத் தான். நன்றாய் இருந்தது முத்தப்பாவின் நடத்தை. உம்! நமக்கென்ன! தள்ளுங்கள்!

புன்னை : சமையலை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். (போகிறாள் அவளுடன் பழநியும் வட்டாக்கள் சுமந்தபடி போகிறான்)

பட்டம்மா : அத்தான் நீங்கள் அறிந்து வருகிறீர்களா இப்போது முத்தப்பா உடல் இளைத்திருப்பதை?

பொன் : இப்போது தான் தெரிகிறது. அதற்குக் காரணம்! சைகோன், இளைஞரின் ஒழுக்கத்தை கெடுத்துவிடும். முத்தப்பாவின் துடிக்கும் இளமையை அது விட்டு வைக்குமா! (கரும்பாயிரம் வருகிறான்)

பொன் : வாருங்கள் கரும்பாயிரம்! சில நாட்களாக உங்களைக் காண முடியவில்லையே! உட்காருங்கள்! (கரும்பாயிரம் கடைக் கண்ணால் பார்க்கிறான். மேசையின் மேல் உள்ள கடிதத்தை)

கரும்பாயிரம்: வேலைத் தொல்லை. இப்போது சிறிது ஓய்வு ஐயாவைப் பார்க்க வேண்டுமே என்ற அவா! ஓடிவந்தேன்.

பட்டம்மா : முத்தப்பாவைப் பார்த்தீர்களா?

கரும்பா : இப்போதா?

பட்டு : உம்!

கரும்பாயிரம்: அதோ போகிறார். நான் அவரைப் பார்த்தேன். அவர் என்னை பார்க்கவில்லை.

பட்டு : முத்தப்பாவுக்கு உடல் நலம் குறைவோ! இளைப்பாக இருக்கவில்லை.

கரும்பாயிரம்: இல்லையே. இப்போது முன்னிலும் பருத்திருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. என்னவென்றால் இப்போது அவர்கள் வாழ்க்கையில் ஓர் அமைதியேற்பட்டிருக் கிறது.

பொன் : முன்பெல்லாம்!

கரும் : அப்படியில்லை. வேலைக்காரன் சமையலும், உதவியும் அமைதியை உண்டாக்குமா? இப்போது ஒரு குடும்பம் போல்... வெளியில் தெரியக்கூடாது. அவருக்கு ஒரு குறைவு ஏற்பட்டால் நமக்குந்தானே!

பொன் : முத்தப்பா இப்போது இங்கு வந்தார் அவருக்கு வந்த கடிதத்தை அவர் கைமறதியாகப் போட்டுவிட்டுப் போய் விட்டார். அதோ எடுத்துப் படித்துப் பாருங்கள்.

(கரும்பாயிரம் படித்து விடுகிறார்)

கரும் : நன்றாயில்லை! ஆயினும் இதையெல்லாம் நீங்கள் கண்டு கொள்வதில் எனக்கு விருப்பமில்லை.

பொன் : அதுசரிதான். பெண்ணுக்குடையவர் ஒருவர் உங்கள் நடத்தையைப் பற்றி என்னைக் கேட்டார்.

கரும் : ஓகோ. உம்? உம்? என்ன சொன்னீர்கள்? என்ன நடந்தது? அவர் எப்படி இருந்தார்?

பொன் : நான் பொய்யா சொல்வேன். உங்களிடம் உள்ள மேன்மை களை விரிவாக கூறினேன். அவர் மகிழ்ச்சியோடு போனார்.

கரும் : பெண்ணையும் பார்த்தேன். அவர் என்னைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யட்டும் என்று இருக்கிறேன். ஒரே பெண்தான். ஏதோ சொத்தும் கையிருப்புத் தொகையும் கூடி நூறாயிரம் இருக்குமாம். சொல்லுகிறார்கள். இருக் கட்டும். பார்ப்போம் நாமும் ஆராய்ந்து தானே ஒன்றில் தலையிட்டுக் கொள்ள முடியும்! நான் வருகின்றேனையா! நாழிகை ஆகிறது. தேநீர் கொண்டு வா! (பழநி தேநீர் கொண்டு வருகிறான் கரும்பாயிரம் அருந்திப் போகிறான்)

கரும் : நன்றி அம்மா வருகிறேன். வருகிறேன். ஐயா!

பொன் : பிறகு எப்போது?

கரும் : நாளைக்கு வருகிறேன்.

(வணங்கிப் போகிறான்.)

## காட்சி - 8

இடம் : தமிழ்நாடு, புதுச்சேரியில் தங்கவேற் பிள்ளை வீடு.

நேரம் : காலை 9 மணி

உறுப்பினர் : தங்கவேற்பிள்ளை வீட்டுக் கணக்கனாகிய முனியப்பன், நடேசப்பிள்ளை.

அமைப்பு : தங்கவேற்பிள்ளை தாழ்வரத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். எதிரில் முனியப்பன் பெட்டியடியில் உட்கார்ந்து கணக்கெழுதிக் கொண்டிருக்கிறான் நடேசப் பிள்ளை வருகிறார்.

தங்கவேற் : வா, நடேசு! சமையக்காரன் என்ன செய்தான் என்றால், நேற்று உருளைக் கிழங்கு பொரியல் பண்ணினான், வாய்க்கு சுவையாய் இருந்தது. பின்னும் இரண்டு தின்று விட்டேன். அதேன்ன செய்கிறதென்றால் இந்தக் கை கால்கள் எல்லாம் வலிக்கும்படி செய்துவிட்டது. எத்தனை நாட்கள். எத்தனை சமையல்காரர்கள் இருக்கட்டும். நமக் கென்று ஒருத்தி இல்லா விட்டால் ஒரு பயனும் இல்லை. என்ன சொத்து? பொற்றாலி யோடு எவையும் போம்' என்றும், 'இல்லாள் அகத்திருள் இல்லாத தொன்றில்லை' என்றும் பெரியோர் தெரியாமலா சொன்னார்கள்! என் வீட்டுக்காரி இறந்து இந்தச் சித்திரை வந்தால் இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அண்ணன் மகன் இருக்கிறானே சைகோனில் அவன் இங்கு வந்துவிட்டால் அவன் மனைவி மகள் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வார்கள். நிலைமையறிந்து வாய்க்கு ஏதுவாக நேரத்தோடு ஏதோ ஆக்கியும் போடுவார்கள். அவனும் இதோ அதோ என்கிறான். வந்தபாடில்லை.

**(தந்தி வருகிறது. தங்கவேற்பிள்ளை வாங்கிப் பிரித்து படிக்கிறார். அவர் முகம் வியப்புறுகிறது)**

தங்கவேற் : நடேசு! என் அண்ணன் மகன் வருகிறானப்பா! அவன் குடும்பத்தோடு வருகிறான். நண்பர்களும் வருகிறார் களாம். இரண்டு வீடும் தனித் தனியாகப் பார்த்து வைக்க வேண்டுமாம். போர் நெருக்கடி காரணமாக வருகிறார் களாம். போர் எனக்கு மிக நன்மையாக முடிந்தது. இல்லா விட்டால் இப்போது வருவானா இவன்? விட்டது தொல்லை என்னை, அவன் மகள் பேர் என்ன? எழுதியிருந்தானே!

கணக்கன் : புன்னை!

தங்க : ஆம் ஆம் புன்னை புன்னை. பெரிய பெண்ணாக இருக்கும். இப்போது என் அண்ணன் மகன் பொன்னரசு இருக்கிறானே, அவனுக்கும் இப்போது ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். பட்டம்மா மிக நல்ல பெண்.

நடேச : மகிழ்ச்சிச் செய்தி! என்றைக்கு வருகிறார்கள்?

தங்க : இன்னும் மூன்று நாட்கள் இடையில் இருக்கின்றன பங்குனி இருபத்திரண்டில் நம் கடற்கரையில் இறங்கு கிறார்கள். கவிஞர் கலைத் தொண்டரும் வருகிறார் அட. அவர் அங்குப் போனவுடன் போர் முற்றியதப்பா!

அவரை நான் தான் அனுப்பினேன். பையன் வீட்டில் தான் இறங்கினார். கையோடு பையன் குடும்பத்தை அழைத்து வந்து விட்டார். நிரம்ப மகிழ்ச்சி. முனியப்பா நடேசு, நம் கார் ஒன்று போதாது. சின்னப்பர், சீனி இருவரு ரிடமும் உள்ள கார்களைக் கேட்டு வைத்து விடுங்கள். நம் முனை வீட்டையும் ஒழித்து தூய்மைப் படுத்தி வையுங்கள். மெத்தை தலையணைகட்கு உறைகள் போட்டு நேர் செய்யுங்கள். நாற்காலிகள், மேசைகள் எல்லாவற்றையும் துடைத்து அங்கங்கு வரிசைப் படுத்துங்கள். அங்கங்கு இருக்க வேண்டிய உவர்க்கட்டி, சீயக்காய்தூள், தலைக்கெண்ணெய், சீப்பு கண்ணாடி, தட்டுமுட்டுக்கள் எல்லாம் ஏற்பாடு செய்து வையுங்கள். அந்த மாட்டு வண்டிகளை எங்கேயும் அனுப்பிவிட வேண்டாம். வேணு, தாண்டவன், முத்து, சோமு நாலு பேரையும் வந்திருக்கும்படி சொல்லி வையுங்கள்.

சமையல் ஆட்கள் இன்னும் இரண்டு பேர்கள் தேவை யிருக்கும். பிரப்பம்பாய், சமக்காளம், மேசை விரிப்புக்கள், தூக்குச் செம்பு, குவளைகள், எல்லாம் துலக்கி வைக்கச் சொல்லுங்கள். தவலை முதலியவைகள் சமையற் பொருட்கள் ஏனங்கள் எல்லாம் பல குடும்பங்களுக்கு வேண்டிய அளவு ஏற்பாடு செய்யுங்கள். அரிசி, பருப்பு முதலியவை தீட்டித் தூய்மை செய்து வைக்கச் சொல்லுங்கள். பழக்கடைக்குச் சொல்லி எல்லா வகைப் பழங்களும் வரும்படி செய்யுங்கள். பையன், வந்தபின் அது இல்லை இது இல்லை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சொல்லி விட்டேன்.

நடேசு : எல்லாம் ஒழுங்கு செய்துவிட்டால் போகிறது. அதற்கென்ன?

தங்க : என்ன முனியப்பா?

முனி : எல்லாம் ஏற்பாடு செய்து விடுகிறேன்.

தங்க : முதலில் காருக்குச் சொல்லிவிட்டு வந்து விடு நடேசு!

**(நடேசப்பிள்ளை போகிறார். அவருடன் முனியப்பன் போகிறான்)**

முனிய : பழக்காரனிடம் இப்போதே சொல்லி வைத்துவிட வேண்டும்.

தங்க : போ விரைவில் (போகிறான்)

**(நடேசப்பிள்ளையும் முனியப்பனும் வீட்டுக்கு வெளியில் குறட்டில் நின்று பேசிக் கொள்ளுகிறார்கள்)**

முனிய : என் நிலை என்ன ஆகிறது மாமா?

நடேச : உன் நிலை எங்கே போய்விடும் வேலையைப் பாரடா! வருகிறாளே புன்னை அவள் உன் பெண்டாட்டி! அப்படி வைத்துக்கொள்! விட்டுவிடுவேனா? தந்தி வந்தது. அவர் படித்தார் உன் முகம் கெட்டுவிட்டது. நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். ஒன்றுக்கும் அச்சப்படாதே.

அந்தக்குட்டி சைகோனிலிருந்து வருகிறாள். படிச்ச பெண். அதனால் கொஞ்சம் நாகரிகமாக இருப்பாள். நீயும் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ள வேண்டும். நல்ல உடுப்புக் கட்டாயம் வாங்கிவிடு. சும்மா இருந்து விடாதே.

அலுவலில் இருப்பவர்கள் போட்டுக் கொள்ளுகிறார்களே தலையில். அந்தப்படி ஒன்று வாங்கிவிடு!

முனிய : ஆம் ஆம் குல்லாய்.

நடேச : உள் சட்டை, நடுச்சட்டை, மேற்சட்டை மூன்றும் வாங்கி விடு. பணத்தைப் பார்க்காதே! கழுத்தில் கட்டிக் கொள் கிறார்களே தெரியுமா,

முனி : நாடா

நடேச : அது வாங்கி விடு. மூன்று சட்டைகளையும் ஒன்றின் மேல் ஒன்றாகப் போட்டுக் கொண்டால் போதுமா. மேலுக்குக் கெண்டை வேட்டி?

முனி : ஏன் பட்டுத் துண்டு எடுத்து விடலாமே.

நடேச : செய்யேன். இடுப்பில் கட்டிக் கொள்கிறார்களே அதில் ஒன்று வாங்கு!

முனி : ஆமாம் மாமா. செட்டித் தெருவில் அந்தப் போலீஸ் காரன் இடுப்பில் கட்டிக் கொள்வதை விற்றுவிடப் போகிறானாம். ஏன் என்றால் அவனுக்கு அலுவல் முடிந்துவிட்டதாம். நாளைக்கு அதை வாங்கி விடுகிறேன்.

நடேச : வேட்டி கட்டிக் கொள்ளலாமா? கால்சட்டை நல்லதா? எது அழகாய் இருக்கும்?

முனி : கால் சட்டைதான் மாமா!

நடேச : அப்படியானால் இன்றைக்கே துணிவாங்கிக் கொடுத்துத் தையற்காரனைத் தைத்துவிடச் சொல்லி விடு, காலுக்கு?

முனி : காலுக்கா, துணியால் உறை ஒன்று விற்கிறதே அதை முதலில் காலுக்குப் போட்டுக்கொள்ள வேண்டும். அதுக்குப் பேர் உள்சோடு. மேல் சோடு தோலால் வாங்கி விடுகிறேன்.

நடேச : தளவாயாக இருக்கிறாரே அண்டைத் தெருவில், அவர் மூக்கில் கண்ணாடி போட்டிருக்கிறார். இத்தனைக்கும் அவர் சின்ன வயசுள்ளவர். அது ஒரு பகட்டாய் இருக்கிறது. அதுபோல நீயும் ஒரு கண்ணாடி வாங்கிவிடு

முனி : என்னிடம் இருக்கிறது. அப்பாவுடையது. போட்டுக் கொள்ளுகிறேன்.

நடேச : இதெல்லாம் இருக்கட்டும். மேலே தடவிக் கொள்ள என்ன செய்வது? கண்ணாடிச் சீசாவில் இருக்குமே?

முனி : அதுவா? மணமாக இருக்கும். நீலகிரித் தைலம் வாங்கிவிட்டால் போகிறது.

நடேச : கையில் ஒரு துணி வைத்துக்கொள்.

முனி : கைக்குட்டை! இருக்கிறது. மெல்லிய துணியை எடுத்துச் சவுக்கத்துக்குச் சவுக்கம் சச்சவுக்கமாகக் கிழிச்சிருக் கேனே.

நடேச : நாள்தோறும் காலையில் குளித்துவிடு. எண்ணெய்த் தோணித் தலையில் ஊற்றி மயிரைச் சீவிக் கொள்! திரு நீற்றைக் குழைத்து நெற்றி நிறைய இட்டுக் கொள். அதன் நடுவில் சந்தனப் பொட்டு, சந்தனப் பொட்டின் நடுவில் ஒரு சின்ன குங்குமப் பொட்டு! அதன் கீழே ஒரு கறுப்புக் கோடு! இத்தனையும் பார்த்தால் அந்தக் குட்டி புன்னை உன் மேல் உயிரை விட்டு விடுவாள். திருமணத்தை முடிப்பவன் நான். தங்கவேற்பிள்ளையின் கடல் போன்ற சொத்தும் பொன்னரசின் சொத்தும் உனக்கு! உறுதி! போடா!

முனி : நீங்கள் ஒரு புள்ளி போட்டால் அது மாறாது மாமா. நினைவு இருக்கட்டும் மாமா. நான் போகட்டுமா?

நடேச : போடா சும்மா!

**(இருவரும் தத்தம் வேலையை நாடிச் செல்லுகிறார்கள்)**

## காட்சி - 9

இடம் : பல தெருக்கள்.

நேரம் : மூன்று நாட்களின் பின்.

உறுப்பினர் : பலர்

அமைப்பு : ஏற்பன

நடேசப்பிள்ளை: (ஒரு தெருவில் போகிறார் எதிரில் வேம்பு வருகிறான்) தெரியுமா செய்தி?

வேம்பு : என்ன, என்ன!

நடேச : நம் தங்கவேற் பிள்ளையின் அண்ணன் மகன் சைகோனிலிருந்து குடும்பத்தோடு வருகிறானே. போர் நெருக்கடியால்தான்.

வேம்பு : அவனுக்கு ஒரு பெண் இல்லை? ஆண் பிள்ளை இல்லை என்று கேள்வி. அந்தப் பெண்ணுக்கு மணம் ஆயிற்றா? இல்லையா? ஏன் கேட்கிறேன் என்றால், நம் செல்லையா பிள்ளையிருக்கிறானே அவனுக்கு முடித்து விடலாம்.

நடேச : சேச்சே, முனியப்பன் இருக்கிறானே, குள்ளம் பாளையம் மூக்கன் மகன்! அவன்தான் காணும் தங்கவேற்பிள்ளை யிடத்திலேயே கணக்கு வேலை பார்க்கிறானே. அவனுக்கு முடியப் போகிறது.

வேம்பு : அதாவது உம் அக்கா பிள்ளை! நல்ல நோக்கம். ஆனால் பையன் நாட்டுப்புறத்துப் பையன். நாகரிகம் தெரியாது. பெண்ணுக்குப் பிடிக்குமா? அந்த ஏற்பாடு தவறிவிட்டால் செல்லையாவின் மகனுக்கு முடித்து விடுங்கள்.

நடேச : தவறினால்தானே? ஆகட்டும்.

**(வேறு தெருவில் முனியப்பன், கோதண்டனைக் காண்கின் றான்)**

கோதண்டன் : என்ன முனியப்பா இரண்டு நாளைக்கு முன் தந்தி வந்ததாமே. சைகோனிலிருந்து. அவர்கள் குடும்பத் தோடு வருவதாக! எங்கே போய் வருகிறாய்?

முனி : தையற்காரனிடம் போய் வருகிறேன். உடுப்பு தைக்கச் சொன்னேன். அவர்கள் இருக்கிறார்களே திருமணம் ஒன்று.

கோதன் : கேட்டால்.

முனி : நூறு ரூபாய்க்கு உடுப்புத் தைத்தாகிறது கேட்டால் என்ன?

கோதன் : பெரிய இடமாச்சே என்றேன்.

முனி : நான் மட்டும் சின்ன இடமோ அவர்கள் வீட்டு கணக்குப் பிள்ளைதானே.

கோதன் : எலுமிச்சபழம்! சரிதான் தாழங்காய்!

வருகிறேன். (போகிறான்)

(ஒரு தெருவில் வேம்பும், வேலுவும் பேசிக் கொள்கிறார்கள்.)

வேம்பு : அதோ மூட்டைத் தூக்கிக் கொண்டு வருகிறானே கீழ்க் கண்ணாலே பார்! அவன் யார் தெரியுமா? தங்கவேற்பிள்ளையின் கணக்கன். குப்பைக்காட்டுப் பையன். தங்கவேற் பிள்ளை அண்ணன் மகன் குடும்பத்தோடு வருகிறான். அவனுக்கு ஒரு பெண். கல்வியுள்ளவள். நாகரிகமுடையவள். அவளை இவன் மணந்து கொள்ள எண்ணுகிறான். அதற்கு உடுப்புத் தைத்து எடுத்து வருகிறான். சிரிக்காதே. இரு, நான் அவன் வாயைக் கிண்டுகிறேன். சிரித்துவிடாதே.

(முதுகில் ஒரு மூட்டையுடன் முனியப்பன் வருகிறான்.)

வேம்பு : கணக்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தாயே முனியப்பா? இதென்ன இப்போது!

முனிய : கணக்கு வேலைதான்

வேலு : கழுதை எங்கே?

முனிய : ஏது கழுதை?

**வேம்பு** : இல்லை, இல்லை கோவேறு கழுதை!

**முனிய** : ஏது என்னிடத்தில்.

**வேம்பு** : கோவேறு கழுதையை நீ விலைக்கு வாங்கியதாக அவர் எண்ணிக் கொண்டார். ஜமீன்தார் மகன் போல் நீயிருக்கிறாய். நீதான் ஜமீன்தார் மகன் என்று வேறு நினைத்துவிட்டார், எப்போது அவர்கள் வருகிறார்கள்?

**முனிய** : நாளைக் காலையில்.

**வேம்பு** : திருமணம் என்று கேள்விப்பட்டேன்.

**முனிய** : ஆமாம்.

**வேம்பு** : உடுப்புக்கிடுப்பெல்லாம் தைத்துவிட்டாயோ?

**முனிய** : எல்லாம் ஆய்விட்டது.

**வேம்பு** : என்னென்ன?

**முனிய** : உள்ளங்காலுக்கு உறை. மேற்சோடு. காலுக்குக் காற்சட்டை. காற்சட்டைக்குப் போலீசு தோல்வார். உள்சட்டை, நடுச்சட்டை. மேற்சட்டை, கழுத்து நாடா, சேலம் கெண்டை வேட்டி, தலைக்குக் குல்லாய், வாசனை போட்டுக் கொள்ள நீலகிரித் தைலம்.

**(வேலு சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியாமல் போகிற போக்கிற்கு வாயை திறந்து விட்டான். வேம்பும் தன் சிரிப்பில், தானே உடல் வளைந்து விழுகிறான்.)**

**வேம்பு** : வேறொன்றுமில்லை. முனியப்பா. எங்கள் இருவரோடு ஒரு முண்டம் சண்டைக்கு வந்தான். அவன் வாசனைப் புட்டி எது நல்லது என்றான். நான் நீலகிரித் தைலந்தான் நல்லது என்றேன். அதற்கு அவன் இல்லை இல்லை. ஓமத்ராக வந்தான் நல்லது என்றான். அதற்காகச் சிரித்தோம்.

**முனி** : அவன் ஒரு மடையன் போலிருக்கிறது. ஓமத்ராகம் தலையில் தடவிக் கொள்ளுவதாச்சே. இருவரும் ஓகோ

**(உரக்கச் சிரிக்கிறார்கள் விழுந்து விழுந்து...)**

**முனி** : ஏன் சிரிக்கிறீர்கள்?

**வேம்பு** : ஓமத்ராகவத்தைத் தலையில் தடவலாம். அவன் தலை வழுக்கை. அதனை நினைத்துச் சிரிக்கிறோம்.

**முனி** : அப்படியா?

வேம்பு : எல்லாம் இந்த மூட்டையில் அடங்கிவிட்டதா?

முனி : ஓ

வேம்பு : காலுக்கு, மேலுக்கு, கழுத்துக்கு, தலைக்கு, ஆயிற்று, கைக்கு?

முனி : உம்!

வேம்பு : எந்தக் கைக்கு?

முனி : வலது கைக்கு.

வேம்பு : இடக்கைக்கு ஏதாவது வேண்டுமே?

முனி : என்ன வேண்டும்?

முனி : ஒன்று வாங்கிக் கொள்ளுகிறேன்.

வேம்பு : கைப்புறத்தில் என்ன?

முனி : கைப்புறத்திற்கு என்ன வேண்டும்.

வேம்பு : குடை! குடையில்லாவிட்டால் பார்ப்பவர் என்ன நினைப்பார்கள்?

முனி : இருக்கிறது வீட்டில். அப்பாவுடையது!

வேம்பு : எடுத்துக்கொள். மூக்குக் கண்ணாடி?

முனி : சொன்னேனே.

வேம்பு : இல்லையே

முனி : எங்கப்பாவுடையது கண்ணாடி இருக்கிறது.

வேம்பு : இந்த உடுப்பெல்லாம் புதிதாக தைத்தது. அப்படியே போட்டுக் கொண்டால் பார்ப்பவர்கள் இப்போதுதான் இவன் தைத்தான் போலிருக்கிறது இதற்கு முன் இதெல்லாம் இவனுக்கு இல்லை போலிருக்கிறது என்று நினைப்பார்களே!

முனி : ஆம் என் செய்யலாம்?

வேம்பு : நேரே வீரப்பசெட்டி குளம் போ. எல்லாவற்றையும் நனைத்துப் பிழிந்து காய வைத்து விடு. காய்ந்து விடும். எடுத்துக்கொண்டு வந்து வைத்துக்கொள். காலையில் உடுத்துக் கொண்டு வந்தவர்கள் அனைவரும் வந்த வுடன் விருந்து சாப்பிடுவார் கள். அப்போது போ. சிறப்பாக இருக்கும்.

முனி : துறைமுகத்துக்குப் போக வேண்டுமே?

வேம்பு : போகாதே! பார்ப்பவர்கள் கூலி ஆள்போல் இருக்கிறது என்று நினைத்து விடுவார்கள்.

முனி : கடற்கரைக்குப் போகும்போது உடுத்துக் கொண்டு போகிறேனே?

வேம்பு : அப்படித்தான் செய். அதுதான் நல்லது. ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது.

முனி : என்ன, என்ன?

வேலு : இங்கிலீஷ் கொஞ்சம் பேசினால் நன்றாய் இருக்கும். பத்து வார்த்தை

முனி : தெரியாதே.

வேலு : இன்றிரவு எங்களுடன் தங்கு. சாப்பிட்டுவிட்டு வந்து விடு. பொறுக்காகப் பத்துச் சொல்லி விடுகிறோம்.

முனி : அப்படித்தான் செய்யுங்கள். மறந்து விடாதீர்கள்.

வேம்பு : நாங்களா மறந்துவிடுவோம்.

வேலு : நீ மறந்து விடாமல் வந்து சேர். (பிரிகிறார்கள்)

இவன் யாரோ தெரியவில்லை அடுத்த சுவடியில் இதோ நான் வந்து விடுகிறேன். முத்தப்பாவை வீடுகாட்டச் சொல்லி அழைத்துப் போகிறேன்.

புன்னை : நல்லது (முத்தப்பாவை நோக்கி) போய் வருகிறீர் களா?

கலைத் தொண்டர்: வராமலா. நான் முத்தப்பாவை அழைத்துக் கொண்டு போய்விடுவேன் என்று அஞ்சாதே. உன்னுடைய முத்தப்பா எனக்கேன்.

புன்னை : என்னை மன்னிக்க வேண்டும். நான் ஐயப்பட வில்லை. அப்படி ஒன்றும்! (அனைவரும் சிரிப்பு! முத்தப்பாவும், கலைத்தொண்டரும் போகிறார்கள்.)

கலைத் : மாணிக்கக் கணையாழி என்றைக்கு?

முத்த : மணம் புரிந்து கொள்வதானால் புன்னையை ஐயா!

கலைத் : நாள்? விரைவில் இருக்கலாமா?

**முத்த** : இருக்கலாம் தங்கள் விருப்பம் போல்.

**கலைத்** : இது கேட்கத்தான் உன்னை அழைத்தேன். அதோ இருக்கிறதே அதுதானே.

**முத்த** : ஆம். நான் போகவா?

**கலைத்** : போகாமல்! உன்னையும் புன்னையையும் நான் பிரித்து வைக்க நினைப்பேனா?

**(முத்தப்பா சிரிப்புடன் போகிறான்)**

**கலைத்** : இங்கு வாருங்கள் இந்தச் சீசாவை ஒருவரும் அறியாமல் வைத்திருங்கள். கேட்கும்போது கொடுங்கள் (கலைத் தொண்டர், ஒரு சுட்டு விரல் அளவுள்ள சீசாவைக் கொடுத்து விட்டுப் போகிறார்! முத்தப்பா அதில் உள்ள மொழிகளைப் படித்து வியப்புடன் போகிறான்)

## காட்சி - 10

**இடம்** : அடுத்த தெரு. ஒரு வீடு.

**நேரம்** : ஐந்தே கால் மணி.

**உறுப்பினர்** : கவிஞர் கலைத்தொண்டர், கரும்பாயிரம்.

**அமைப்பு** : புன்னையின் படத்தைக் கையில் வைத்துப் பார்த்த கரும்பாயிரம் உட்கார்ந்திருக்க, கலைத் தொண்டர் உள்ளே செல்லுகிறார்.

**கரும்** : வாருங்கள் ஐயா, உட்காரவேண்டும்.

**கலைத்** : என்ன செய்கிறீர்கள்?

**கரும்** : காதற்பசி ஐயா, கனிந்த பழத்தை எண்ணி வருந்தி இருக்கிறேன். அதோ பாருங்கள் அவள் உருவப்படம்.

**கலைத்** : வருந்துகிறேன். நான் புன்னையைக் கேட்டேன். அவள் முத்தப்பாவை மணந்து கொள்ளப் போவதாகச் சொல்லி விட்டாள், உறுதியாக.

**கரும்** : என் அன்பு தலை கவிழ்ந்தது. வேறு வழியில்லையா ஐயா! நீங்கள் எனக்காக முயன்றீர்களா?

**கலைத்** : ஒத்த இரண்டுள்ளங்களின் இடையில் நான் புக வழியேது?

**கரும்** : இரண்டுள்ளங்களும் ஒன்றாகிவிட்டனவா? நான் நம்ப வில்லை. அறியவேண்டும் ஐயா!

**கலைத்** : அப்படியா நினைக்கிறீர்கள். ஏன்?

**கரும்** : முத்தப்பாவின் நடத்தை சரியில்லை. அவன் நோயாளி. இது பொன்னரசுக்கும், புன்னைக்கும் சமையல் வேலை செய்யும் பழநிக்கும் தெரியும்.

**கலைத்** : முயற்சி செய்யுங்கள். நிலைமையைச் சொல்லிவிட்டு போக வந்தேன். இந்தச் சிறு கூடையை இங்கு ஒருபுறம் வைத்து விட்டுப் போகிறேன்.

**கரும்** : இதோ இந்த அறையில் வையுங்கள் (அறையில் ஒரு சிறிய அளவில் அமைந்த கூடை அதில் பல சிறியதும், பெரியதுமான சீசாக்கள் அவற்றில் விரல் அளவுள்ள சீசா மூன்றும் உள்ளன.

**(அக்கூடையை வைத்துப் போகிறார்)**

**கரும்** : நீங்களும் சிறிது சொல்லுங்கள் எனக்காக. முத்தப்பாவின் நடத்தையை நினைவூட்டுங்கள்.

**கலைத்** : நன்று.

**(போய்விடுகிறார். அறையில் சென்று கரும்பாயிரம் கூடையில் இருந்த சீசாக்களைப் பார்க்கிறான்! அவைகளில் மூன்று சீசாக்கள் அவனை வியப்புறச் செய்கின்றன)**

## காட்சி - 11

இடம் : தங்கவேற்பிள்ளை வீடு.

நேரம் : இரவு ஒன்பது மணி.

உறுப்பினர் : தங்கவேற்பிள்ளை, நடேசப்பிள்ளை, முனியப்பன்.

அமைப்பு : தங்கவேற்பிள்ளை சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். மற்ற இருவரும் கீழே உட்கார்ந்திருக்கிறார்கள்.

நடேச : அப்புறம் என்னதான் முடிவு.

தங்க : முடிவு! என்ன முடிவு கேட்கிறாய்? அவன் புன்னையின் கண்ணுக்கு பிடிக்கவில்லை. அவள் ஒப்பவில்லை. அதிக நாட்கள் கணக்கு வேலை பார்த்தால் பெண்ணையும் சொத்தையும் கொடுக்க வேண்டுமா? பேராசையைப் பார்! ஒரு காணி நன்செய் கீழை வெளியில் இருக்கிறதே அதையும் முனை வீட்டையும் எழுதித் தருகிறேன் முனியப்பனுக்கு! விருப்பமானால் இருக்கட்டும் - இல்லையானால் இப்போதே எழுந்து வெளியில் போகட்டும். வேறு பேச்சுக் பேசக்கூடாது. குல்லாய் போட்டுக் கொண்டான் குல்லாய் குரங்கு போல! கையில் ஒரு துணி இராத்தல் துடைக்கிறவன் போல!

ஒரு கையில் பிரம்பு! காக்காய் ஓட்டவாடா? பெண்ணை மயக்க வைக்கிறான் இவன் உடுப்பிலே! போடா எழுந்து! எல்லாவற்றையும் கழட்டிப் போட்டு வாடா! ஏன் கழுதை மாதிரி இத்தனையும் சுமந்து கொண்டிருக்கிறாய்?

நடேச : எழுந்து போ முனியா

(முனியப்பன் விசையாய் எழுந்து வெளியில் போகிறான்)

(குறிப்பு: பல பக்கங்கள் காணவில்லை)

கரும் : கார் கொண்டு வந்தால் என்ன செய்துவிடுவீர். இன்னும் அரை மணி நேரத்தில் திருமணம் நடந்துவிடும். ஈஸ்வரனே வந்து முயன்றாலும் முத்தப்பா அவளை மணந்துகொள்வதைத் தடுப்பேன் - என்றீர் சைகோனில்.

**சுப்ரமணி** : இன்னும் அரை மணி நேரம்! கார் வேண்டுமே! முனியப்பா ஓடுங்கள். ஓர் கார் கொண்டு வாரும்.

**(கலைத் தொண்டர் வருகிறார்)**

**சுப்ரமணி** : திருமணத்திற்குப் போகவில்லையா நீங்கள் கவிஞரே! எனக்குத் தெரியாமல் திருமணத்தை நடத்துகிறாரோ! அடடா.

**கலைத்** : இருவர் உள்ளமும் ஒத்துப்போனாலும் இருவர் உள்ளத்தை விட வலியுள்ளது ஒன்று இருக்கிறது. அதைத் தடுங்கள் என்றீர்கள். அதைப் பார்க்கத்தான் வந்தேன். இன்னும் அரைமணி நேரம் இருக்கிறது.

**சுப்ரமணி** : ஆம் சொன்னேன். இதோ உங்கட்குக் காட்டி விடுகிறேன். என்னிடம் வைத்துள்ள சீசா முத்தப்பா முதலியவர்களிடம் இருந்தால் வேடிக்கையாய் இருக்கும்.

**கலைத்** : உங்களிடம் சீசா இருக்கிறது. பயனென்ன? உங்களிடம் கொள்கை இருக்க வேண்டும். கொள்கை இருந்துதான் பயனென்ன?

**சுப்ரமணி** : மானவுணர்ச்சியால் நான் தோற்கவில்லை. என் கொள்ளை தோற்றது. நாம் நம்பும் சாஸ்திரம் தோற்றது. உயிர் வாழேன். இதோ சீசா! எடுத்துக் கொண்டு வருகிறேன்.

**கலைத்** : ஏறுங்கள் காரில் இதோ கார்.

**(குறிப்பு: ஒரு தாள் காணவில்லை)**

காதலாக இருக்கிறீர்களாம். அதைக் கெடுத்துவிட்டால் அவரை விரும்புவீர்களாம்.

**புன்னை** : ஏன் அப்பா? பார்த்தீர்களா? அன்றைக்குச் சிறிது நேரத்தில் முத்தப்பாவைக் கெட்ட நடத்தை உடையவர் என்று கூறிவிட்டீர்களே!

**பழநி** : முத்தப்பா அவளை வைப்பாக வைத்திருக்கிறார், இவளை வைப்பாக வைத்திருக்கிறார் என்று உங்களிடம் சொல்லச் சொன்னார் என்னிடம்.

**புன்னை** : இன்னும் என்ன இதுபோல் செய்தார். சொல்லி யிருப்பாரே உன்னிடம்? கரும்பாயிரத்துக்குப் பெண் கொடுப்பதாக

ஒருவர் எங்களிடம் வந்தாரே, அவரை யார் அனுப்பியது?

பழநி : கரும்பாயிரந்தான். வந்தவன் ஒரு பகல் வேஷக்காரன்.

புன்னை : இனிமேல் எப்படி நடந்து கொள்ளுவார் தெரியுமா, உனக்கு?

பழநி : தெரியாதுங்கள்.

பொன் : அம்மா விடு அவனை! இந்தா, இதைக் கேள் பழநி! நாங்கள் இதையெல்லாம் கேட்டதாகவோ, நீ எங்களிடம் சொன்ன தாகவோ கரும்பாயிரத்திடம் சொல்ல மாட்டாயே?

பழநி : இல்லை.

பொன் : சொன்னால் உன்னை வைக்க மாட்டேன். இனிக் கரும்பா யிரம் சொல்லுவதை எம்மிடம் அவ்வப்போது சொல்லி விடுகிறாயா?

பழநி : உறுதிங்கள்! சொல்லிவிடுகிறேன். உறுதிங்க.

பொன் : சரி, போ, உள்ளே!

புன்னை : அம்மாவிடம் சொல்லி வைக்க வேண்டும்.

**(போகிறார்கள் உள்ளேயிருந்து தங்கவேற்பிள்ளை வருகிறார்)**

கலைத் : என்ன தோழர்? உட்காருங்கள்!

தங்க : நாட்கள் வீணாகின்றன. புன்னைக்குத் திருமணத்தை நடத்தி விட வேண்டும். பொன்னரசைக் கேட்டுப்பாருங்கள் மாப்பிள்ளை பார்த்திருக்கிறானா என்று. நல்ல பிள்ளை யாய் இருக்க வேண்டும். படித்தவனாயிருக்க வேண்டும். உறவினர் வீட்டுப் பையனாயிருந்தால் மிகவும் நலம். ஏனென்றால் சாதி, ஒன்றும் பார்க்கும் தொல்லையிராது! புது வழியில் போவது பொருத்த மில்லை. என் சொத் துக்கும், பொன்னரசு சொத்துக்கும் அவன் தானே உரியவ னாக வேண்டும். பொன்னரசுக்கும் ஆண் பிள்ளை இல்லை ... எனக்கும் ஆண்பிள்ளை இல்லை. எனக்குப் பொன்னரசு கொள்ளி வைப்பான். பொன்னரசுக்கு மாப்பிள்ளை கொள்ளி வைக்க வருகிறவன்தானே?

**கலைத்** : அப்படியா! மெய்தான் தோழரே! விரைவில் திருமணத்தை முடித்துவிடவேண்டியது தான். நீங்கள் போய்ப் புன்னையை வரச்சொல்லுங்கள்.

**(தங்கவேற்பிள்ளை போகிறார், புன்னை வருகிறாள்)**

**கலைத்** : புன்னை! நான் உன்னைக் கேட்பதற்கு நீ ஒளிவு மறை வின்றிப் பதில் சொல்ல வேண்டும். உன்னை நீ யாருக்குக் கொடுக்கப் போகிறாய். உன் நெஞ்சைப் பறித்தவர் யார்?

**புன்னை** : முத்தப்பா. நான் முத்தப்பாவுக்கு வாழ்க்கைப்படாவிடில் உயிர் துறப்பேன் ஐயா. இது உறுதி.

**கலைத்** : அம்மா, இது எனக்குத் தெரிந்த செய்திதானே! நீயும் முத்தப்பாவும் இன்பம் எய்தி நீடுழி வாழ்க.

அம்மா இதோ இந்தக் கண்ணாடி சீசாவை மறைவாக உன்னிடம் வை. நான் கேட்கும் போது கொடு. நான் வெளியில் போய் வருகிறேன்.

(சுட்டுவிரல் நீளம், பருமனுள்ள அச்சீசாவைக் கொடுத்து விட்டு கலைத் தொண்டர் வெளியிற் போய்விடுகிறார்)

## காட்சி - 12

இடம் : அதே தெருவில் முனை வீடு

நேரம் : மணி 4

**உறுப்பினர்** : சுப்ரமணியன், கலைத் தொண்டர்

அமைப்பு : சுப்ரமணியன் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான்.
கலைத்தொண்டர் உள்ளே நுழைகிறார்.

சுப்ர : வரணும், வரணும் இந்த ஆசனத்தில் அமரலாமே.
(உட்காருகிறார்)

கலைத் : என்னமோ எழுதிக் கொண்டிருந்தீர்கள். நான் நடுவில் வந்தேன்.

சுப்ர : என் பந்துக்கள் திருவாரூரில் இருக்கிறார்கள் அவர்கட்குக் கடிதம்! வேறொன்றுமில்லை. மாணிக்கக் கணையாழி யாருக்குக் கிடைத்தது?

கலைத் : நான் நினைத்தபடி முடிந்தது. முத்தப்பாவுக்கே.

சுப்ர : ரொம்ப சந்தோஷம். அதிருக்கட்டும். சொந்தத்திலே மாப்பிள்ளை இருக்காப்லே இருக்கே?

கலைத் : யார்?

சுப்ர : தங்கவேற்பிள்ளையின் கணக்கன்.

கலைத் : கண்ணாடியும், கைப்பிரம்புமாகக் காட்சியளித்தாரே அவரா?

சுப்ர : அதற்கென்ன! குலத்தே குரங்கையும் கட்டலாமின்னு சாஸ்திரம்.

கலைத் : குலத்துக்காக குரங்கையும் புன்னை கட்ட வேண்டுமோ? குலம் எங்கே இருக்கிறது.

சுப்ர : இல்லாமல் என்ன. நீங்கள் சைகோனில் கூடச் சொன்னீர்கள். தமிழ்நாட்டில் சாதிக் குற்றுயிராய்க் கிடக்கிறது. சைகோனில் அது செத்தே பூட்டு திண்ணு. சாதியின் பேரில் ஒரு சல்லிவேர் கூட அறுந்து போவது இருக்கட்டும். நைந்துகூடப் போகவில்லை என்று எண்ணுகிறேன்.

**கலைத்** : நம்மிருவர் கருத்தும் மாறுபடுகின்றன. முதியவர் சிலர் போக இளைஞர்களிடம் சாதியில்லை என்று எண்ணுகிறேன். நிற்க. கரும்பாயிரம் புன்னையை விரும்புவதாகத் தெரிகிறதே.

சுப்ர : அப்படித்தான் தெரிகிறது. ஆனால் ஒன்று நிச்சயம். முத்தப்பாவுக்கு புன்னை மனைவியல்ல.

**கலைத்** : இருவர் எண்ணமும் ஒன்றுபட்டிருக்கிறது.

சுப்ர : சாமி என்பது இருவர் எண்ணத்தைவிட வலிமையுள்ளது.

**கலைத்** : இருக்கலாம். நான் போய் வருகிறேன்.

சுப்ர : நான் சொல்லியவற்றில் தங்களுக்கு ஏதாவது ஆயாசம் உண்டோ?

**கலைத்** : இல்லை, இல்லை.

சுப்ர : சரி போய் வாருங்கள்

**(கலைத் தொண்டர் அங்கு ஒரு சீசாவை வைத்துவிட்டு மறந்தவர் போல் போகிறார். அதைச் சுப்ரமணியன் எடுத்துப் பார்க்கிறான்)**

சுப்ர : ஐயா! இந்தச் சீசாவை வைத்து விட்டீர்கள்!

**கலைத்** : அப்படியா! அடடா. மறதி. மறதி ஆனால் நீங்கள் தான் அதை மறைவாக வைத்துக் காப்பாற்றித் தரவேண்டும். என்னிட மிருந்தால் வேறு எங்கேயாவது வைத்து விடுவேன்.

சுப்ர : சரி வைத்து வைக்கிறேன்.

**(போகிறார் கலைத்தொண்டர், சுப்ரமணியன் அந்த சீசாவின் மேல் எழுதியிருக்கும் மொழிகளைப் படிக்கிறான் அவன் கண்ணில் வியப்புத் தோன்றுகிறது)**